# 11th History Book Back Questions TM - New Book

## Do You Know Box Content

## Download Winmeen App

### [1] பண்டைய இந்தியா: தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

**காட்டு உயிரினங்களும் பழக்கப்படுத்தப்பட்ட உயிரினங்களும்:**

காட்டுத்தாவரங்களும் விலங்குகளும் பறவைகளும் பிற உயிரினங்களும் இயற்கையாக வளர்பவை. தாவரங்களும் விலங்கினங்களும் மனிதர்களால் பெருமளவில் பழக்கப்படுத்தப்படும் போது, அவற்றின் வாழ்க்கைமுறையும் உடலியல் கூறுகளும் மாற்றம் அடைகின்றன. அவற்றின் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக, காட்டில் உள்ள தாவரங்களுடன் ஒப்பிடும்போது, பழக்கப்படுத்தப்பட்ட தாவரங்களின் விதைகள் அளவில் சிறியதாக மாறுகின்றன. விலங்குகளைப் பழக்கப்படுத்தும்போது அவை தங்களின் மூர்க்க குணத்தை இழக்கின்றன.

**அச்சூலியன் மரபும் சோகனியன் மரபும்:**

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பழங்கற்கால மக்களின் தொடக்க காலப் பண்பாடு அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளின் அடிப்படையில் இரு மரபுகளாகப் பிரிக்கப்படுகிறது. கைக்கோடரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் (Acheulian) என்றும் கூழாங்கல்லைச் செதுக்கி உருவாக்கப்படும் கருவிகளைக் கொண்ட மரபு சோகனியன் (Sohanian) என்றும் அழைக்கப்படுகிறது. அச்சூலியன் மரபு பெருமளவில் கோடரிகளையும் வெட்டுக்கத்திகளையும் கொண்டது. சோகனிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த வேலைகளுக்கான கருவிகளையும் மட்டுமே கொண்டது. இன்றைய பாகிஸ்தானில் உள்ள சோகன் ஆற்றின் வடிநீர்ப்பகுதியில் நிலவிய மரபு என்பதால், இது சோகனிய மரபு எனப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற ஆய்வுகளின்போது இதே பகுதியில் அச்சூலியன் மரபு சார்ந்த கருவிகளும் கிடைத்தன. எனவே தனித்தன்மை வாய்ந்த சோகனிய மரபு என்ற ஒன்று இருந்ததாகக் கூற இயலாது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

எக்கஸ் – குதிரை, கழுதை, வரிக்குதிரை ஆகிய விலங்குகளை உள்ளடக்கியப் பேரினம்.

**மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம்:**

மேல் பழங்கற்காலத்தைச் சேர்ந்த ஒரு வழிபாட்டுத்தலமாக இருந்திருக்கலாம் என கருதத்தகுந்த ஒரு சிறு கட்டுமானம் உத்திரப்பிரதேசத்தில் உள்ள பாகோர் என்னுமிடத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. செதுக்கப்படாத கற்களால் வட்ட வடிவில் சூழப்பட்ட ஒரு மணற்பாறையின் பாளம் இங்கு காணப்படுகிறது. இது தற்கால வழிபாட்டுத்தலங்களை ஒத்திருக்கிறது. இந்தியாவில் வழிபாட்டுத்தலங்களுக்கான தேடலில் கிடைத்த மிகப் பழமையான சான்று இதுதான்.

winmeen.com



முக்கோண வடிவிலான கற்கள்– மேல் பழங்கற்கால வழிபாட்டுத்தலம்

இதேபோன்ற கல்–சமகாலத்தைய வழிபாட்டுத்தலம்

**தீக்கோழி முட்டை ஓடுகள்:**

இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலப் பண்பாடு நிலவிய இடங்களில் தீக்கோழிகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பறவையின் முட்டை ஓடு மணிகள் செய்யப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பாட்னேயில் கிடைத்த தீக்கோழி முட்டை ஓட்டின் காலம் இன்றைக்கு முன் 25,000 ஆண்டுகள் எனக் கணிக்கப்படுகிறது. பிம்பெட்கா, பாட்னே ஆகிய இடங்களிலும் தீக்கோழி, முட்டை ஓடுகள் கிடைத்துள்ளன.




மேல்பழங்கற்காலப் பண்பாட்டைச்சேர்ந்த அலங்கரிக்கப்பட்ட தீக்கோழி முட்டை ஓடுகள், பாட்னே, மகாராஷ்டிரா

**தேரி:** தேரிகள் என்பன மணற்குன்றுகளால் உருவாக்கப்படும் கடற்கரைப் பகுதிகளாகும். இம்மண் வகை புத்துயிரூழியின் இரண்டாம் கட்டத்தில் உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**மெஹர்காரில் தொடக்க கால பல்மருத்துவம்:**

மனித மூதாதையருக்கு மருத்துவக் குணம் கொண்ட மூலிகைகள் குறித்த அறிவு இருந்திருக்கிறது. வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்து அவர்களால் தங்களது உடல்நலத்தைப் பராமரிக்க முடிந்தது. வாழ்க்கைமுறை மாறியபோது புதிய நோய்கள் தோன்றின. அவற்றுக்கான மருந்துகளைக் கண்டறிய வேண்டியிருந்தது.

புதிய கற்காலத்திலிருந்து மக்கள் அரைத்த தானியங்களையும் சமைத்த உணவுகளையும் உண்ணத் தொடங்கினார்கள். இது பல் கோளாறுகளுக்கும் பிற உடல் பிரச்சினைகளுக்கும் வழிவகுத்தது. உயிருள்ள ஒரு மனிதரின் பல்லில் துளையிட்டதற்கான மிகப் பழமையான சான்று மெஹர்காரில் கிடைத்துள்ளது. இது பல்மருத்துவத்துக்கான ஒரு முகவுரையாகத் தோன்றுகிறது.

**தொல்தாவரவியலாளர்கள்** (Archaeobotanist) பழமையான வேளாண்மையையும் மனிதருக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான உறவையும் குறித்து ஆய்வு செய்கிறார்கள்.

**ரோரி செர்ட்:**

இந்தப் படிவுப்பாறை பாகிஸ்தானில் உள்ள ரோரி பகுதியில் காணப்படுகிறது. ஹரப்பா மக்கள் கத்திகளும் பிற கருவிகளும் செய்வதற்கு இது பயன்பட்டது.

**சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்**

இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகரமயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும்.

சிந்து நாகரிகத்தின் தோற்றமும் தோற்றுவித்தவர்கள் குறித்த செய்திகளும் விவாதத்துக்கு உரியனவாகவே உள்ளன. சிந்து எழுத்துகளின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை. தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்ட வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்துக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவுவதற்கான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடைக்கற்காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உறுதியானதொரு முடிவுக்கு வர இன்னும் அதிக ஆய்வுகள் தேவை.

பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் __________________ எனப்படுகிறது.

அ) வரலாற்றுக்கு முந்தைய காலம்

ஆ) வரலாற்றுக்காலம்

இ) பழங்கற்காலம்

ஈ) புதிய கற்காலம்

2. வரலாற்றின் பழமையான காலம் ______________ ஆகும்.

அ) பழங்கற்காலம்

ஆ) புதிய கற்காலம்

இ) செம்புக்காலம்

ஈ) இரும்புக்காலம்

3. பழங்கற்காலக் கருவிகள் முதன்முதலில் _________ இல் அடையாளம் காணப்பட்டன.

அ) 1860

ஆ) 1863

இ) 1873

ஈ) 1883

4. மத்திய பிரதேசத்தில் உள்ள சன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் –1, பாகோர் –3 ஆகியவை ____________ நாகரிகம் நிலவிய இடங்கள்.

அ) கீழ்ப்பழங்கற்காலம்

ஆ) இடைப்பழங்கற்காலம்

இ) மேல்பழங்கற்காலம்

ஈ) புதிய கற்காலம்

5. மெஹர்கார் ___________ பண்பாட்டுடன் தொடர்புடையது.

அ) பழைய கற்காலப்

ஆ) புதிய கற்காலப்

இ) இடைக்கற்காலப்

ஈ) செம்புக்காலப்

6. ____________ கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத்தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.

அ) க்யூனிபார்ம்

ஆ) ஹைரோக்ளைபிக்ஸ்

இ) தேவநாகரி

ஈ) கரோஷ்டி

7. பர்சஹோம் ________________ நிலவிய இடமாகும்.

அ) காஷ்மீரின் புதிய கற்காலப்பண்பாடு

ஆ) கங்கைச் சமவெளியின் புதிய கற்காலப்பண்பாடு

இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப்பண்பாடு

ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப்பண்பாடு

8. தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது _____________ ஆகும்.

அ) பொ.ஆ.மு. 3000 – 2600

ஆ) பொ.ஆ.மு. 2600 – 1900

இ) பொ.ஆ.மு. 1900

ஈ) பொ.ஆ.மு. 1700 – 1500

9. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக ______________ இருந்தது.

அ) வேளாண்மை

ஆ) மட்பாண்டம் செய்தல்

இ) கைவினைத்தொழில்கள்

ஈ) மீன்பிடித்தல்

10. சிந்து நாகரிகம் ஏறத்தாழ _____________இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.

அ) பொ.ஆ.மு. 1800

ஆ) பொ.ஆ.மு. 1900

இ) பொ.ஆ.மு. 1950

ஈ) பொ.ஆ.மு. 1955

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்:**

1. அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் 2. அ) பழங்கற்காலம் 3. ஆ) 1863 4. இ) மேல்பழங்கற்காலம் 5. ஆ) புதிய கற்காலப் 6. அ) க்யூனிபார்ம் 7. அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு 8. அ) பொ.ஆ.மு. 3000 – 2600 9. அ) வேளாண்மை 10. ஆ) பொ.ஆ.மு. 1900

**[2] பண்டைய இந்தியா : செம்புக்கால பெருங்கற்கால, இரும்புக்கால, வேதகாலப் பண்பாடுகள்**

**ஜெண்ட் அவெஸ்தா:**

ஜெண்ட் அவெஸ்தா எனப்படும் இப்பாரசீக/ஈரானிய நூல் ஜொராஸ்டிரிய மதத்தைச் சேர்ந்த நூலாகும். இந்தோ–ஈரானிய மொழிகளைப் பேசிவந்த மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு, அவர்களின் கடவுள்கள் குறித்து இந்நூல் பல செய்திகளைக் கூறுகிறது. இந்தியாவின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளைப் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள சொற்கள் வேதநூல்களின் சமஸ்கிருதச் சொற்களோடு மொழி ஒப்புமை கொண்டுள்ளன. இந்தியத் துணைக் கண்டத்திற்கு வெளியே அமைந்திருந்த ஆரியர்களின் தொடக்ககால வாழிடங்கள் பற்றி அறிந்துகொள்ள ஏதுவான துணைச்சான்றுகளை இந்நூல் கொண்டுள்ளது.

winmeen.com

கருப்பு, சிவப்பு வண்ண மட்கலன்கள், மனித எலும்புச் சான்றுகள் மற்றும் இரும்புப் பொருட்களுடன் தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி அருகில் உள்ள வடமலைக்குண்டா எனும் இடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள. இங்கு சில கற்பலகைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டுகள் பழமையான குத்துக்கல் திருப்பூர் மாவட்டம் சிங்காரிபாளையம் குந்தலம் அருகே நடந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது; இது, உப்பாறு நதிக்கரையில் பண்டைய கால மனிதர்களின் வாழிடங்கள் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது.

மொழியியல் ஆய்வாளர்கள் வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் மொழியை, அது எழுதப்பட்ட வடிவத்திலும் வாய்மொழி வடிவத்திலும் ஆய்வு செய்கின்றனர். சொற்பிறப்பியல், வரலாற்று, மொழியியல், ஒப்பீட்டு மொழியியல், இலக்கிய விமர்சனம் ஆகியவற்றை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

ஒரு பொதுமூதாதையரிடமிருந்து உருவாகும் தலைமுறைகள் வம்சாவளி/ கொடிவழி/ பரம்பரை எனப்படும்.

சத்யமேவ ஜயதே (வாய்மையே வெல்லும்) என்ற சொற்றொடர் முண்டக உபநிஷ்த் எனும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

காலனிய கால அறிஞர்கள் பண்டைய இந்திய இலக்கியங்களின்மீது ஆர்வம் கொள்வதற்கு வெகுகாலத்திற்கு முன்னரே, 1657இல் மொகலாய இளவரசரான தாராசுகோ உபநிடதங்களை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. வேதப்பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர்

அ) பிராமணங்கள்

ஆ) சம்ஹிதைகள்

இ) ஆரண்யகங்கள்

ஈ) உபநிடதங்கள்

2. மேல் கங்கைச்சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) குரு –பாஞ்சாலம்

ஆ) கங்கைச்சமவெளி

இ) சிந்துவெளி

ஈ) விதேகா

3. ஆதிச்சநல்லூர் __________________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.

அ) கோயம்புத்தூர்

ஆ) திருநெல்வேலி

இ) தூத்துக்குடி

ஈ) வேலூர்

4. கீழ்க்காணும் இணைகளை கவனிக்கவும்.

i) சேனானி – படைத்தளபதி

ii) கிராமணி – கிராமத்தலைவர்

iii) பலி – தன்னார்வத்தால்

iv) புரோகிதர் – ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

அ) i

ஆ) ii

இ) iii

ஈ) iv

5. **கூற்று:** முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

**காரணம் :** பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரியானது. காரணம் தவறானது

ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரியானவை.

**விடைகள்**

1. ஆ) சம்ஹிதைகள் 2. அ) குரு –பாஞ்சாலம் 3. இ) தூத்துக்குடி 4. ஈ) iv 5. ஆ) கூற்றும் காரணமும் சரியானவ. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

## [3] பிரதேச முடியரசுகளின் தோற்றமும் புதிய மதப்பிரிவுகள் உருவாக்கமும்

### இரும்புத்தொழில்நுட்பத்தின் தாக்கம் : பல்வேறு பார்வைகள்

தெற்கு பிகாரில் கிடைக்கும் இரும்புக் கனிமத்தைத் தேடி அடைந்து, அதன் மீது ஏக போகத்தினை நிலைநாட்டும் நோக்குடன் இந்தோ–ஆரியர்கள் கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தார்கள். மகத அரசு அரசியல் மேலாதிக்கம் பெறுவதற்கு இரும்புத்தாது வளமே காரணமாக இருந்தது – டி.டி. கோசாம்பி

கங்கை வடிநீர்ப் பகுதியில் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைய இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் வழிவகுத்தன – ஆர்.எஸ்.சர்மா

காடுகள் அழிப்படவும் உபரி வேளாண் உற்பத்தி ஏற்படவும் இரும்புக்கோடரிகளும் இரும்புக்கலப்பைகளும் காரணம் என்பது கட்டுக்கதை. ஏனெனில், 16, 17ஆம் நூற்றாண்டு வரைகூட கங்கைச்சமவெளி அடர்ந்த வனப்பகுதியாகவே இருந்தது – மக்கன் லால்

கங்கைப்பகுதியின் காடுகள் நெருப்பின் மூலமாகவும் அழிக்கப்பட்டிருக்கலாம் – ஏ.கோஷ், நிஹரஞ்சன் ரே

"மக்களின் அறிவுசார் ஆர்வத்தை அடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, அவர்களின் மனம் அதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்கிறது. இத்தவிர்க்கமுடியாத எதிர்வினைகள் எல்லாவிதமான முறைசார்ந்த அதிகாரங்களையும் பொறுத்துக்கொள்ள இயலாத தன்மையாக வெளிப்படுகிறது. அது சடங்குரீதியான

மதத்தின் கட்டுப்பாட்டால் காலம்காலமாக ஒடுக்கப்பட்ட வாழ்விலிருந்து ஆவேசமாக விடுபடும் உணர்வாக உள்ளது" – இந்தியத் தத்துவ மேதை மேனாள் குடியரசுத்தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்.

**தமிழ்நாட்டில் ஆசீவர்கள்:** மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகியவை ஆசீவகக் கொள்கை குறித்து குறிப்பிடுகின்றன. நீலகேசியின் உண்மைக்கான தேடல் அவளை புத்தரிடமும், புராணனிடமும் இட்டுச் செல்கிறது. புராணன் ஆசீவகர்களின் தலைவர். சோழர்கள் ஆசீவர்கள் மீது வரி விதித்ததாகக் கூறப்படுகிறது.

**பசித்த புலி : ஒரு ஜாதகக் கதை**

நல்லொழுக்கத்திற்கும், ஆன்மீக நெறிக்கும் பெயர் பெற்ற ஒரு குடும்பத்தில் பிறந்த போதிசத்துவர் சிறந்த அறிஞராக, ஆசிரியராக உயர்ந்தார். செல்வம் பற்றிய ஆசை எதுவும் இன்றி, அவர் கானகம் சென்று துறவியாக வாழ்ந்தார். கானகத்தில் அவர் அப்போதுதான் பிரசவித்திருந்த பசியோடிருந்த புலியைப் பார்த்தார். புலி பசியில் தான் ஈன்ற குட்டிகளில் ஒன்றையே தின்ன இருந்தது. அருகில் வேறு உணவு எதுவும் இல்லாத நிலையில், போதிசத்துவர், இரக்கம் மேலிட, தனது உடலையே அதற்கு உனவாக அளித்தார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. புத்தர் தனது முதல் போதனையை _________இல் நிகழ்த்தினார்.

அ) சாஞ்சி

ஆ) வாரணாசி

இ) சாரநாத்

ஈ) லும்பினி

2. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்குமிடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் _____________ ஆகும்.

அ) சீவகசிந்தாமணி

ஆ) அச்சரங்கசூத்திரம்

இ) கல்பசூத்திரம்

ஈ) சமனபலசுத்தா

3. பகவதிசூத்திரம் ஒரு __________ நூலாகும்.

அ) பௌத்தம்

ஆ) சமணம்

இ) ஆசிவகம்

ஈ) வேதம்

4. _______________ வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

அ) இரும்பு

ஆ) வெண்கலம்

இ) செம்பு



winmeen.com

ஈ) பித்தளை

5. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்தாக வளர்ந்த அரசு ______________ ஆகும்.

அ) கோசலம்

ஆ) அவந்தி

இ) மகதம்

ஈ) குரு

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்:** 1. இ) சாரநாத் 2. ஈ) சமனபலசுத்தா 3. ஆ) சமணம் 4. அ) இரும்பு 5. இ) மகதம்

## [4] அரசு மற்றும் பேரரசு உருவாக்கம்

பரந்து பட்ட, அதிகார வர்க்கத்தை உருவாக்கவும், நிர்வாகத்தையும் ராணுவத்தையும் நடத்த நிதிஆதாரத்தையும் ஆட்களையும் திரட்டவும் ஒரு புதிய நிர்வாக அமைப்பு ஒரு மையப்படுத்தப்பட்ட அரசிற்கு தேவைப்பட்டது. வரிவிதிப்பின் மூலம் அரசின் செலவுகளுக்குத் தேவையான நிதியைத் திரட்ட ஒரு வருவாய் நிர்வாக அமைப்பை ஏற்படுத்த வேண்டியதாக இருந்தது. இத்தகைய ஒரு அரசியல் உருவாக்கம் நிர்வாக மையங்களாக, நகரங்களை மாற்றுவதற்கு இட்டுச் சென்றது. இவை கிராமங்கள், ஊரகப் பகுதிகளிலிருந்து மாறுபட்டவை. பேரரசை விரிவுபடுத்தவும் பாதுகாக்கவும் ஒரு பெரிய நிலையான ராணுவம் தேவைப்பட்டது.

ஈரானில் உள்ள பெர்சிபோலிசில் காணப்படும் முதலாம் டாரியஸின் கல்வெட்டில்தான் "இந்து" என்ற வார்த்தை முதன்முறையாகக் காணப்படுகிறது. பொதுவாக நதியையும், குறிப்பாக சிந்து நதியையும் குறிக்கும் "சிந்து" என்ற சொல் பாரசீகத்தில் "இந்து"வானது. கிரேக்கர்கள் Sindu என்பதில் உள்ள S ஐ நீக்கிவிட்டு, Indu என்றார்கள். அது பின்னர் 'ஹிந்து' என்றானது. பின்னர் அதிலிருந்து 'இந்தியா' வந்தது.

**சமஸ்கிருதத்திற்கும் பாரசீகத்திற்கும் உள்ள தொடர்பு:**

ரிக் வேதத்திற்கும் ஜென்ட் அவஸ்தாவிற்கும் பல மொழியியல் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆரியர்கள் என்ற சொல்லைப் பண்டைக்கால பாரசீகர்களும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இந்திய மொழி– பண்பாட்டு ஆய்வாளர் தாமஸ் பரோவின் கூற்றின்படி, உச்சரிப்பு மட்டும் காலப்போக்கில் மாறியிருக்கலாம். பொ.ஆ.மு. 1380 ஐச் சேர்ந்த போகஸ் கோய் (வடகிழக்கு சிரியா) கல்வெட்டு ஒன்று ஒரு ஹிட்டைட் அரசனுக்கும், மிட்டன்னி அரசனுக்கும் இடையிலான ஒப்பந்தத்தைப் பற்றிக் கூறுகிறது. அது சில ரிக்வேத கடவுளர்களான இந்திரா, உருவ்னா (வருணா), மித்ரா , நஸதயா (அஸ்வினி) ஆகிய பெயர்களைக் குறிப்பிடுகிறது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ______________

அ) தாமஸ் சாண்டர்ஸ்

ஆ) ஜேம்ஸ் பிரின்செப்

இ) சர் ஜான் மார்ஷல்

ஈ) வில்லியம் ஜோன்ஸ்

2. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த ________

அ) பிம்பிசாரர்

ஆ) அஜாதசத்ரு

இ) அசோகர்

ஈ) மகாபத்ம நந்தர்

3. _____________ என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

அ) மகாவம்சம்

ஆ) தீபவம்சம்

இ) பிரமாணம்

ஈ) முத்ராராட்சசம்

4. _______________ என்ற விசாகதத்தரின் நாடம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது.

அ) முத்ராராட்சசம்

ஆ) ராஜதரங்கிணி

இ) அர்த்தசாஸ்திரம்

ஈ) இண்டிகா

5. மெகஸ்தனிஸ் எழுதிய _____________ சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.

அ) இண்டிகா

ஆ) முத்ராராட்சசம்

இ) அஷ்டத்யாயி

ஈ) அர்த்தசாஸ்திரம்

6. __________________ நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

அ) அர்த்தசாஸ்திரம்

ஆ) இண்டிகா

இ) ராஜதரங்கிணி

ஈ) முத்ராராட்சசம்

7.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்** 1. ஆ) ஜேம்ஸ் பிரின்செப் 2. அ) பிம்பிசாரர் 3. அ) மகாவம்சம் 4. அ) முத்ராராட்சசம் 5. அ) இண்டிகா 6. அ) அர்த்தசாஸ்திரம்

## [5] தென்னிந்தியாவில் சமுதாய உருவாக்கம்

**ஸ்தூபிகள்**

ஸ்தூபி என்பது புதை மேடுகளின் மேல் களிமண்ணால் கட்டப்பட்டதாகும். இறந்தோரை எரித்த சாம்பல் இங்கு வைக்கப்படும். தொடக்கத்தில் புத்தரின் அஸ்தி எட்டு ஸ்தூபிகளில் வைக்கப்பட்டன. இவ்வாறு பௌத்தத்தின் புனிதக் கட்டடக்கலை தோற்றம் பெற்றது. அரைக்கோள வடிவமுள்ள ஸ்தூபி பேரண்டத்தைக் குறிக்கின்றது. அத்துடன் புத்தர் ஆன்மீக உலகின் பேரரசர் என்பதையும் குறிக்கிறது. ஸ்தூபிகளைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுவட்டப் பாதையில் பக்தர்கள் வலம் வருவர்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஏறத்தாழ 2400 பாடல்கள் கொண்ட இலக்கியக் கருவூலமாகும். மூன்று முதல் எண்ணூறு அடி அளவு கொண்ட இப்பாடல்கள் பாணர்களாலும் புலவர்களாலும் இயற்றப்பட்டவை.

**எட்டுத்தொகையாவன:** 1. நற்றிணை 2. குறுந்தொகை 3. ஐங்குறுநூறு 4. பதிற்றிப்பத்து 5. பரிபாடல் 6. கலித்தொகை 7. அகநானூறு 8. புறநானூறு

**பத்துப்பாட்டாவது:** 1. திருமுருகாற்றுப்படை 2. பொருநராற்றுப்படை 3. சிறுபாணாற்றுப்படை 4. பெரும்பாணாற்றுப்படை 5. முல்லைப்பாட்டு 6. மதுரைக் காஞ்சி 7. நெடுநல்வாடை 8. குறிஞ்சிப்பாட்டு, 9. பட்டினப்பாலை, 10. மலைபடுகடாம்

சங்கம் மருவிய காலத்தைச் சேர்ந்த, **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்** பெரும்பாலும் நீதி பற்றியும் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றியும் பேசுவனவாகும். திருக்குறளும் நாலடியாரும் இதில் முதன்மையானவை.

முதன்மையான காப்பியங்களான **சிலப்பதிகாரமும், மணிமேகலையும்** பண்பாடு மற்றும் மத வரலாற்றுக்கு சிறந்த சான்றுகளாகப் பயன்படுபவை.

**சங்க காலப் பெண்பாற் புலவர்**

சங்கப் பாடல்களின் தொகுப்பிற்கு பங்களித்த 450க்கும் மேற்பட்ட புலவர்களில் முப்பது பெண்பாற் புலவரும் அடங்குவர். அவர்கள் 150க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளனர். அவர்களுள் ஔவையார், அல்லூர் நன்முல்லையார், காக்கைப்பாடினியார், காவற்பெண்டு, நல்வெளியார், ஒக்கூர் மாசாத்தியார், பாரிமகளிர் ஆகியோர் மிகமுக்கிப் பெண்பாற் புலவர்களாவர்.

குறிஞ்சி – மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்கு வேட்டையாடுதலும், உணவு சேகரித்தலும் வழக்கமாக இருந்தது.

முல்லை – காடும் காடு சார்ந்த இடமுமான இங்கு, கால்நடை மேய்ப்பதும், அத்துடன் மாற்றிட வேளாண்மை செய்வதும் தொழிலாக இருந்தது.

மருதம் – வயலும் வயல் சார்ந்த இடமுமான இங்கு நீர்பாசனத்தின் மூலம் கலப்பைகளைப் பயன்படுத்தி வேளாண்மை செய்வது தொழிலாகும்.

நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமுமான இங்கு மீன்பிடித்தலும் உப்பு உற்பத்தியுமே முக்கியத் தொழில்களாகும்.

பாலை – மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதியான இங்கு வேளாண்மை சாத்தியமில்லை என்பதால் மக்கள் கால்நடைத் திருட்டையும் கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொண்டனர்.

வைகை நதிக்கரையிலுள்ள கீழடி அகழாய்வுகள் மூலம் நகரமயமாதல் கி.மு.6ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பது தெளிவாகிறது. இதே காலக்கட்டத்தில்தான் வடஇந்தியாவின் கங்கை சமவெளிப் பகுதியிலும் நகரமயமாதல் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சேர்ந்த கல்வெட்டுகளில் ஒன்று சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களின் குடும்பம் வம்சாவளி ஆகியன குறித்து எக்குறிப்பும் காணப்படாவிட்டாலும் சில அறிஞர்கள் அவர்களைக் களப்பிர அரசர்கள் எனக் கருதுகின்றனர். பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டின் மூன்றாவது கால்பகுதி காலத்தில் களப்பிரர்கள் ஆட்சி பாண்டியர்களால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. கரிகாலன் _________________ மகனாவார்.

அ) செங்கண்ணண்

ஆ) கடுங்கோ

இ) இளஞ்சேட் சென்னி

ஈ) அதியமான்

2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

i) தலையாலங்கானம் – நெடுஞ்செழியன்

ii) பட்டினப்பாலை – உருத்திரங்கண்ணனார்

iii) கஜபாகு – இலங்கை

iv) திருவஞ்சிக்களம் – சோழர்

அ) i

ஆ) ii

இ) iii

ஈ) iv

3. ________________ ராஜசூய யாகத்தை நடத்தினார்.

அ) பெருநற்கிள்ளி

ஆ) முதுகுடுமிப் பெருவழுதி

இ) சிமுகா

ஈ) அதியமான்

4. இக்சவாகுகள் _____________ பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.

அ) ஆந்திரா– கர்நாடகா

ஆ) ஒடிசா

இ) தக்காணப் பகுதி

ஈ) பனவாசி

5. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க.

i) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்.

ii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்.

iii) இக்சவாகுகள் வேதவேள்விகள் ஆதரித்தனர்.

iv) உப்பு வியாபாரிகள் உமணர் என்றழைக்கப்பட்டனர்.

அ) (i) மற்றும் (ii)

ஆ) (ii) மற்றும் (iii)

இ) (i) மற்றும் (iii)

ஈ) (iii) மற்றும் (iv)

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. இ) இளஞ்சேட்சென்னி 2. ஈ) iv 3. அ) பெருநற்கிள்ளி 4. அ) ஆந்திரா– கர்நாடகா 5. ஈ) (iii) மற்றும் (iv)

## [6] மௌரியருக்குப் பிந்தைய அரசியல் அமைப்பும் சமூகமும்

**காந்தாரக் கலை:**

பண்பாட்டுத் தாக்கங்கள் சங்கமிக்குமிடத்தில் அமைந்துள்ள காந்தாரம் கிரேக்க மற்றும் ரோமானியப் பண்பாடுகளின் செல்வாக்குக்கும் உட்பட்டது. பொ.ஆ. முதல் நூற்றாண்டில் காந்தாரக் கலை வடிவங்கள் வளர்ச்சியடைந்தன. குஷாணப் பேரரசுக் காலத்தில் , ரோமுடனான அதன் தொடர்புகளினால் ரோமானியக் கலை நுட்பங்களோடு கலந்து, வட மேற்கு இந்தியா முழுவதும் பின்பற்றப்பட்டன. ஆன்ம நிலையில் – கண்கள் பாதி மூடிய நிலையில் – தியானத்திலிருக்கிற புத்தரைச் சித்தரித்ததற்காகக் காந்தாரக் கலை புகழ்பெற்றது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. அலெக்சாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ___________

அ) செலியுகஸ் நிகேடர்

ஆ) அன்டிகோனஸ்

இ) அண்டியோகஸ்

ஈ) டெமெட்ரியஸ்

2. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு _______________ தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.

அ) ரோமானிய

ஆ) கிரேக்க

இ) சீன

ஈ) பிரிட்டிஷ்

3. வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம் __________

அ) இந்தியாவிலிருந்து மேற்க்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது

ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது

இ) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

4. இந்தோ–கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் ___________

அ) யூதிடெமஸ்

ஆ) டெமெட்ரியஸ்

இ) மினாண்டர்

ஈ) ஆன்டியால்ஸைடஸ்

5. குஷாண நாணயங்கள் _______________ நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.

அ) ரோமானிய

ஆ) கிரேக்க

இ) குப்த

ஈ) சாதவாகன

6. இந்தோ–கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி _____________ என்று குறிப்பிடப்பட்டது.

அ) மதுரா கலை

ஆ) காந்தாரக் கலை

இ) பாக் கலை

ஈ) பாலா கலை

7. கீழ்க்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?

அ) புத்தசரிதம் – அஸ்வகோஷர்

ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் – மெகஸ்தனிஸ்

இ) அர்த்தசாஸ்திரம் – கௌடில்யர்

ஈ) காமசூத்திரம் – வாத்சாயனார்

8. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர்__________

அ) மொக

ஆ) ருத்ரதாமன்

இ) அஸிஸ்

ஈ) யசோவர்மன்

9. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்,

i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

அ) i) சரி

ஆ) ii) சரி

இ) i), ii) இரண்டுமே சரி

ஈ) i), ii) இரண்டுமே தவறு

10. _____________ பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அ) அரிக்கமேடு

ஆ) ஆதிச்சநல்லூர்

இ) புகார்

ஈ) பல்லாவரம்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. அ) செலியுகஸ் நிகேடர் 2. ஆ) கிரேக்க 3. ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது, 4. இ) மினாண்டர் 5. அ) ரோமானிய 6. ஆ) காந்தாரக் கலை 7. ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் – மெகஸ்தனிஸ் 8. ஆ) ருத்ரதாமன் 9. இ) (i), (ii) இரண்டுமே சரி 10. அ) அரிக்கமேடு

## [7] குப்தர்

**மதுரா பாடலிபுத்திரம் குறித்து பாஹியான்**

மதுராவில் மக்கள்தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் தமது குடும்பத்தைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை…… அரசருக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் மட்டும்தான் தானியத்தில் ஒரு பகுதியை அரசருக்குத் தரவேண்டும். சூழலைப் பொறுத்து குற்றவாளிகளுக்கு மிதமாகவோ, கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது……

மீண்டும் மீண்டும் கலகம் செய்தால், குற்றமிழைத்தால், வலது கை துண்டிக்கப்படும்…. நாடு முழுவதும் மக்கள் எந்த உயிரினத்தையும் கொல்வதில்லை. எந்த மதுபானத்தையும் அருந்துவதில்லை

பாடலிபுத்திரத்தில் வசிப்பவர்கள் நல்ல பணக்காரர்கள்; வசதியானவர்கள்; ஈகைக் குணத்தில் ஒருவரோடொருவர் போட்டி போடுபவர்கள்.

நகரங்களில் வைசியக் குடும்பத்தினர் தர்மம் செய்வதற்கும் மருத்துவத்திற்கும் சத்திரங்களைக் கட்டியிருக்கிறார்கள். அனைத்து ஏழைகள், ஆதரவற்றோர், அனாதைகள், விதவைகள், குழந்தையில்லாதவர்கள், அங்கவீனர்கள், ஊனமுற்றவர்கள் என அனைவருக்கும் அனைத்துவிதமான உதவிகளும் செய்யப்படுகின்றன.

ஹூணர்களின் தோற்றம் குறித்து உறுதியாக எதுவும் தெரியவில்லை. ரோமானிய வரலாற்றாளர் டாசிடஸின் கூற்றுப்படி, அவர்கள் காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இனக்குழுக்கள். ரோமாபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்கள். வெள்ளை ஹூணர்கள் என்று அழைக்கப்பட்ட ஹூணர்களின் ஒரு பிரிவு மத்திய ஆசியாவிலிருந்து இந்தியா நோக்கி நகர்ந்தது. இவர்களது படையெடுப்பு குஷாணர்கள் காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பமானது.

குப்தர்கள் அதிக எண்ணிக்கையில் தங்க நாணயங்களையும், ஒப்பீட்டளவில் குறைந்த எண்ணிக்கையில் வெள்ளி, செம்பு நாணயங்களையும் வெளியிட்டனர். எனினும் குப்தர் காலத்திற்குப் பின்னர் தங்க நாணயங்களின் புழக்கம் குறைந்துபோனது.

பண்டைய காலத்தில் உருவான ஸ்மிருதிகள் நல்லொழுக்கம், அரசியல், கலை மற்றும் பண்பாடு என்று பல்வேறு கருப்பொருள்கள் குறித்துப் பேசிய சமய நூல்களாகும். தர்மசாஸ்திரங்களும் புராணங்களும் இந்த இலக்கியக் கட்டமைப்பின் மையப்பொருளை வடிவமைத்தன.

பதினெட்டு முக்கிய புராணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவைகளில் பிரம்ம புராணம், பத்ம புராணம், விஷ்ணு புராணம், ஸ்கந்த புராணம், சிவமகா புராணம், மார்கண்டேய புராணம், அக்னி புராணம், பவிஷ்ய புராணம், மத்ஸ்ய புராணம், ஸ்ரீமத்பகவத் புராணம் ஆகியன நன்கு அறியப்பட்டவையாகும்.

**நிலப்பிரபுத்துவம்:** நிலப்பிரபுத்துவம் என்ற சமூக அமைப்பு இந்தியாவின் மத்தியகால சமூகத்தின் ஒரு பண்புநிலை ஆகும். வரலாற்றாளர் ஆர்.எஸ். சர்மா பின்வரும் நிலப்பிரபுத்துவ பண்புகளைப் பட்டியலிடுகிறார்: அரசர் அளிக்கும் நில மானியம், நிதி, நீதி உரிமைகளை பயனாளிகளுக்கு மாற்றித்தருதல்; விவசாயிகள், கலைஞர்கள், வணிகர்கள் மீது நில உடைமையாளர்களுக்கு உரிமை அளித்தல்; அடிக்கடி நிகழ்ந்த கட்டாய உழைப்பு நிகழ்ச்சிகள்; உபரியை அரசு எடுத்துக்கொள்ளல்; வணிகத்திலும், நாணயம் அச்சடித்தலிலும் வீழ்ச்சி; அதிகாரிகளின் ஊதியத்தை நில வருவாய் வசூல் மூலம் பெற்றுக்கொள்ள அனுமதிப்பது; சமந்தர்கள் (நிலப்பிரபுத்துவ துணைநிலை ஆட்சியாளர்கள்) அதிகாரங்கள் அதிகரித்தல்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளில் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

அ) இலக்கியச் சான்றுகள்

ஆ) கல்வெட்டு சான்றுகள்

இ) நாணயச் சான்றுகள்

ஈ) கதைகள், புராணங்கள்

2. பொருத்துக

எழுதியவர் இலக்கியப் படைப்பு

i) தன்வந்திரி – 1. சூரிய சித்தாந்தா

ii) வராஹமிகிரா – 2. அமரகோஷா

iii) ஆர்யபட்டர் – 3. பிருஹத்சம்ஹிதா

iv) அமரசிம்மா – 4. ஆயுர்வேதா

அ) 4, 3, 1, 2

ஆ) 4, 1, 2, 3

இ) 4, 2, 1, 3

ஈ) 4, 3, 2, 1

3. ________________ க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

அ) முதலாம் சந்திரகுப்தா

ஆ) சமுத்திரகுப்தா

இ) இரண்டாம் சந்திரகுப்தா

ஈ) ஸ்ரீகுப்தர்

4. ______________ என்ற சீனப் பயணி பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

அ) இட்சிங்

ஆ) யுவான் –சுவாங்

இ) பாஹியான்

ஈ) வாங்–யுவாந்சீ

5. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரைக் குகைக் கோவில் இல்லை?

i) உதயகிரி குகை (ஒடிசா)

ii) அஜந்தா –எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

iii) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா)

iv) பாக் (மத்தியப் பிரதேசம்)

அ) i

ஆ) ii

இ) iii

ஈ) iv

6. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் ________

அ) திக்நாகர்

ஆ) வசுபந்து

இ) சந்திரகாமியா



winmeen.com

ஈ) வராகமிகிரர்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. ஈ) கதைகள், புராணங்கள் 2. அ) 4, 3, 1, 2 3. ஆ) சமுத்திரகுப்தர் 4. இ) பாஹியான் 5. இ) (iii) 6. ஆ) வசுபந்து

**[8] ஹர்ஷர் மற்றும் பிரதேச முடியரசுகளின் எழுச்சி**

**உங்களுக்குத் தெரியுமா?**

பாணரின் ஹர்ஷ சரிதம் ஒரு அரசரின் முதல் வாழ்க்கை வரலாற்று நூலாகும். அது இந்தியாவில் புதிய இலக்கிய வகையைத் தொடங்கி வைத்தது.

**கன்னோசியின் அரசராக ஹர்ஷர்:**

கன்னோசியின் (மௌகரி அரசின் தலைநகர்) முக்கியமானவர்கள் தங்களது அமைச்சரான போனியின் அறிவுரையின்படி ஹர்ஷரை அரியணையில் அமர அழைப்பு விடுத்தனர். தயக்கம் காட்டிய ஹர்ஷர் அவலோகிதேஷ்வர போதிசத்வரின் அறிவுரையின்படி ராஜ்புத்திரர், சிலாதித்யா ஆகிய பட்டங்களுடன் ஆட்சியதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். ஹர்ஷரின் ஆட்சியின் கீழ் தானேஸ்வரமும் கன்னோசியும் ஒன்றாக இணைந்தன. பின்னர் ஹர்ஷர் தனது தலைநகரைக் கன்னோடிக்கு இடம் மாற்றிக் கொண்டார்.

**யுவான் சுவாங்:** 'பயணிகளின் இளவரசன்' என்று புகழப்படும் யுவான் சுவாங் ஷர்ஷரின் ஆட்சி காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். பொ.ஆ.612இல் பிறந்த யுவான் சுவாங் தனது இருபதாம் வயதில் துறவு பூண்டார். அவர் இந்தியாவில் தங்கியிருந்தபோது, வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பல்வேறு புனிதத் தலங்களைப் பார்வையிட்டார். நாளந்தா பல்கலைக்கழகத்திலும் பயின்ரார். புத்தர் மீதான யுவான் சுவாங்கின் ஆழமான மற்றும் பௌத்த மதத்தில் அவருக்கு இருந்த பரந்த அறிவும் ஹர்ஷரின் பாராட்டுக்குரியதாக இருந்தன. புத்தர் நினைவுச் சின்னங்களாக 150 பொருள்கள், தங்கத்திலும் வெள்ளியிலும் சந்தனத்திலும் ஆன புத்தரின் உருவச்சிலைகள், 657 தொகுதிகள் கொண்ட அரிய கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை யுவான் சுவாங் இந்தியாவிலிருந்து எடுத்துச் சென்றார்.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பனிரெண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பாலர்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகரமாகக் கொண்டு கிழக்கு இந்தியாவை ஆண்டனர். அவர்களது நாட்டில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி ஆகிய மொழிகள் பயன்பாட்டில் இருந்தன. பாலர்கள் புத்த மதத்தின் மகாயான பிரிவைப் பின்பற்றினர்.

ஹிரண்யகர்ப்பம் என்றால் தங்கக் கருப்பை என்று பொருள். மதகுருக்கள் விரிவான சடங்குகளை நடத்திய பின்னர் தங்கத்தாலான கருப்பையிலிருந்து வெளிவரும் நபர் மேலுலக ஆற்றல் கொண்ட உடலைப் பெற்றவராக, மறுபடியும் பிறப்பெடுத்தவராக அறிவிக்கப்படுவார். சாதவாகன வம்சத்து அரசரான கௌதமிபுத்ர சதகர்ணி என்பவர் சத்திரிய அந்தஸ்தை அடைவதற்கு ஹிரண்யகர்ப்பச் சடங்கை நடத்தினார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை _____________ என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

அ) கிரகவர்மன்

ஆ) தேவகுப்தர்

இ) சசாங்கன்

ஈ) புஷ்யபுத்திரர்

2. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை __________ இன் அறிவுரையின் படி ஏற்றுக்கொண்டார்.

அ) கிரகவர்மன்

ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்

இ) பிரபாகரவர்த்தனர்

ஈ) போனி

3. ______________ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.

அ) குந்தலா

ஆ) பானு

இ) அவந்தி

ஈ) சர்வாகதா

4. கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?

அ) ஹர்ஷசரிதம்

ஆ) பிரியதர்சிகா

இ) அர்த்த சாஸ்திரா

ஈ) விக்ரம ஊர்வசியம்

5. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.

ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.

இ) மகிபாலர் கீதங்கள் வங்காளத்தின் கிராமப்பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.

ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. அ) கிரகவர்மன் 2. ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர் 3. இ) அவந்தி 4. ஆ) பிரியதர்சிகா 5. ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்

winmeen.com

## [9] தென்னிந்தியாவில் பண்பாட்டு வளர்ச்சி

**கூரம் செப்பு பட்டயத்தில் இருந்து:** (வரி : 12) கிழக்கு மலையில் இருந்து சூரியனும் சந்திரனும் எழுவது போல, தனது இன அரசு வம்சாவளியில் இருந்து (தோன்றிய) நரசிம்மவர்மனின் பேரன்; அவர் இளவரசர்களின் மகுடங்களுக்கெல்லாம் மணிமகுடம்; அவர் தலை எதற்கும் (எங்கும்) பணிந்ததில்லை; எதிரி அரசர்களின் யானைப் படைகளை எதிர்த்து விரட்டிய சிங்கம், நரசிம்மாவால் ஆசிர்வதிக்கப்பட்ட தோற்றமுடையவர்; அவரே இளவரசராக (பூமிக்கு) வந்திருக்கிறார்; சோழர்கள், களப்பிரர்கள், பாண்டியர்களை மீண்டும் மீண்டும் தோற்கடித்துள்ளார். அவர் ஆயிரம்கரமுடையான் (ஆயிரம் கரமுடைய காத்தவராயன் போல), நூற்றுக்கணக்கான போர்களில் ஆயிரம் கரங்கள் கொண்டு போரிட்டது போல் செயல்பட்டவர்; பரியாலா, மணிமங்கலம், சுரமாரா போர்களில் வெற்றிச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் புலிகேசியின் முதுகில் பொறித்து புறமுதுகிட்டு ஓடச் செய்தார்; குடமுனி (அகத்தியர்) அரக்கன் வாதாபியை அழித்தது போல் வாதாபி நகரை ஒழித்தார்.

**இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு:** ஐஹோல் (கர்நாடகா) மேகுடி கோவில் ஒரு குன்றின் மேலுள்ளது. இச்சமணக் கோவிலின் கிழக்குச் சுவரில் 19 வரிகளைக் கொண்ட சமஸ்கிருதக் கல்வெட்டு ஒன்று உள்ளது. (சக வருடம் 556: கி.பி, 634 – 635 காலத்தைச் சார்ந்தது). இக்கல்வெட்டுச் செய்திகளை எழுதியவர் ரவிகீர்த்தி என்ற கவிஞர். இக்கல்வெட்டு சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும். குறிப்பாக அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த இரண்டாம் புலிகேசி 'சத்யஸ்ராய' (உண்மையின் உறைவிடம்) என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இக்கல்வெட்டு சாளுக்கியரின் அரசவம்ச வரலாற்றை, இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்சவர்தனரைத் தோற்கடித்ததைக் கோடிட்டுக் காட்டுகிறது.

**சேரர் –குறிப்பு:**

பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை கேரளா, சேர பெருமாள் அரசர்களால் ஆளப்பட்டிருந்தாலும் ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம்வரை அவர்களது வரலாறு குறித்து ஓரளவே தெரியவந்துள்ளது.

1879இல் புதுச்சேரிக்கு அருகே உருக்காட்டுத்தோட்டம் என்னுமிடத்தில் இருபுறமும் இணைக்கப்பட்டு லிங்கம், நந்தி ஆகியன (பல்லவர்களின் முத்திரை) பொறிக்கப்பட்ட செப்பு வளையத்தில் கோர்க்கப்பட்ட பதினொரு செப்புப் பட்டயங்கள் கண்டறியப்பட்டன. அரசன் நந்திவர்மனின் (பொ.ஆ. 753) இருபத்திரண்டாவது ஆட்சியாண்டில், மானியமாகத் தரப்பட்ட ஒரு கிராமம் குறித்த செய்திகள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன் உள்ளடக்கம் அரசரைப் பற்றிய சமஸ்கிருத மொழியில் புகழ்வதில் தொடங்கி மானியத்தைப் பற்றிய விவரங்களைத் தமிழில் கூறி இறுதியில் சமஸ்கிருத செய்யுளோடு முடிவடைகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

எல்லோரா குகைகளை 1983ல் உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக இணைக்கப்படவில்லை.

அ) மூன்றாம் கோவிந்தன் வாதாபி

ஆ) ரவிகீர்த்தி இரண்டாம் புலிகேசி

இ) விஷயம் ராஷ்ட்டிரகூடர்

winmeen.com

ஈ) நம்மாழ்வார் குருகூர்

2. தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

i) சிம்மவிஷ்ணு – 1. சாளுக்கிய அரசன்

ii) முதலாம் ஜெயசிம்மன் – 2. பல்லவ அரசன்

iii) முதலாம் ஆதித்தன் – 3. கப்பல் தளம்

iv) மாமல்லபுரம் – 4. சோழ அரசன்

அ) 4, 3, 1, 2

ஆ) 4, 1, 2, 3

இ) 2, 1, 4, 3

ஈ) 4, 3, 2, 1

3. காம்போஜம் என்பது நவீன ____________

அ) அஸ்லாம்

ஆ) சுமத்ரா

இ) ஆனம்

ஈ) கம்போடியா

4. ____________ சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு சமய மையம்

அ) சரவணபெலகோலா

ஆ) மதுரை

இ) காஞ்சி

ஈ) கழுகுமலை

5. அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோவில்கள் எங்கு உள்ளது?

அ) ஐஹோல்

ஆ) வாதாபி

இ) மேகுடி

ஈ) பட்டாடக்கல்

6. அயல்நாட்டு வணிகர்கள் _________ என்று அறியப்பட்டனர்.

அ) பட்டணசாமி

ஆ) நானாதேசி

இ) விதேசி

ஈ) தேசி

winmeen.com

7. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு ___________

அ) அத்வைதம்

ஆ) விசிஷ்டாத்வைதம்

இ) சைவசித்தாந்தம்

ஈ) வேதாந்தம்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. அ) மூன்றாம் கோவிந்தன்– வாதாபி 2. இ) 2, 1, 4, 3 3. ஈ) கம்போடியா 4. அ) சரவணபெலகொலா 5. ஈ) பட்டாடக்கல் 6. ஆ) நானாதேசி 7. அ) அத்வைதம்

**[10] அரபியர், துருக்கியர் வருகை**

பாரசீக வரலாற்று ஆவணங்கள், தில்லி சுல்தானியம் குறித்து மிகைப்படுத்திக் கூறுகின்றன. குறிப்பிட்ட சுல்தானின் ஆட்சியில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்த அவற்றின் கருத்துகள் எந்த விமர்சனமும் இன்றி நவீன கல்விப்புலத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளன – சுனில் குமார், Emergence of Delhi Sultanate

அரபியரும் இரானியரும் இந்தியாவை 'ஹிந்த்' என்றும், இந்தியர்களை 'இந்துக்கள்' என்றும் குறிப்பிட்டனர். இருப்பினும் இந்தியாவில் இஸ்லாமிய சமுதாயம் தோன்றிய பிறகு 'ஹிந்து' எனும் பெயர் இஸ்லாமியர் அல்லாத இந்தியர்களைக் குறிப்பதாயிற்று.

கணிதவியலாளரும் தத்துவஞானியும் வானியலாளரும் வரலாற்று ஆசிரியருமான அல்–பெருனி, கஜினி மாமுதுவுடன் இந்தியா வந்தார். கிதாப்–உல்–ஹிந்த் என்ற தனது நூலை இயற்றுவதற்கு முன்பு அவர் சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார். இந்து மத நூல்களையும் தத்துவ நூல்களையும் கற்றார். யூக்ளிடின் கிரேக்க நூலைக்கூட அவர் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தார். ஆரியபட்டரின் முக்கிய நூலான ஆர்யபட்டியம் (புவி, அதன் அச்சில் சுழல்வது இரவு பகலை ஏற்படுத்துகிறது போன்ற செய்திகளை உள்ளடக்கிய நூல்) என்பதை அவர் மேலை நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார். இந்தியாவுக்கும் பிற உலக நாடுகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தார்.

லட்சுமணர் கோவில், விஸ்வநாதர் கோவில், கந்தரியா மகாதேவர் கோவில் உள்பட பல கோவில்களைக் கொண்ட உலகப் புகழ்பெற்ற கஜிராஹோ கோவில் வளாகம், கஜிராஹோவிலிருந்து ஆட்சிபுரிந்த பந்தேல்கண்ட் சந்தேலர்களால் கட்டப்பட்டது.

அடிமை வம்சத்தை மம்லக் வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது 'ஓர் அடிமை' என்பதற்கான அரபுத் தகுதிப் பெயருமாகும்.

புகழ்பெற்ற நாளந்தா பௌத்தப் பல்கலைக் கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா நூலகத்தில் இருந்த இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன.

பாண்டகன் என்பது பண்ட என்பதன் பன்மையாகும்; இச்சொல்லுக்குப் படை அடிமை என்று பொருள். இராணுவப்பணி அனுபவம், பேரரசருடனான நெருக்கம், நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில்

அவர்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். இந்த நம்பிக்கை, அவர்கள் ஆளுநர்களாகவும் தளபதிகளாகவும் நியமிக்கப்படுவதற்கு வழிகோலியது. வட இந்தியாவில் குரித் பண்டகன், மொய்சுதீன் கோரியின் அடிமைகளாவர். இந்த அடிமைகளுக்கு சொந்தச் சமூக அடையாளம் இல்லை; இதனால் அவர்களது எஜமானர்கள் அவர்களுக்குப் புதிய பெயர்கள் சூட்டினார்; 'நிஸ்பா' என்பதையும் உள்ளடக்கிய அப்பெயர்கள் அவர்களது சமூக அல்லது பிரதேச அடையாளத்தைக் குறித்தன. அடிமைகள், தங்களது எஜமானர்களின் நிஸ்பாவைக் கொண்டிருந்தனர்; எனவே மொய்சுதீன் அடிமை, மொய்சு எனும் நிஸ்பாவைக் கொண்டிருப்பார்; சுல்தான் சம்சுதீன் இல்துமிஷின் அடிமை, ஷம்ஸி பண்டகன் என்று குறிப்பிடப்படுவார்.

**இரஸியா சுல்தானா (1236 – 1240):** இவர் பேரரசர் இல்துமிஷின் மகள். இரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்கிய பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான தடைகளைக் கடந்தே இரஸியா பேரரசியாகப் பதவி ஏற்றார். மொராக்கோ நாட்டைச் சேர்ந்த பயணி, இபின் பதுதாவின் கூற்றுப்படி 'குதிரை மீது ஆண்கள் சவாரி செய்வதைப் போல், கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ இரஸியாவும் சவாரி செய்தார். தனது முகத்துக்கு அவர் திரையிடவில்லை'. இருப்பினும் அவர் மூன்றரை ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை அவர் குதிரை இலாயப் பணித்துறைத் தலைவராக (அமீர்–இ–அகுர்) ஓர் உயர்ந்த பதவியில் அமர்த்தினார். இது, துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. யாகுத்துக்கும் அரசி இரஸீயாவுக்கும் இருந்த நெருக்கத்தைப் பெரிதுபடுத்த, பிரபுக்கள், அரசியைப் பதவியிலிருந்து இறக்க முயன்றனர். இரஸியாவுக்குப் பொதுமக்கள் ஆதரவு இல்லாததால், தில்லியில் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தெற்குப் பஞ்சாபில் கலகக்கார ஆளுநர் அல்துனியாவைத் தண்டிப்பதற்கு அவர் நடவடிக்கை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைச் சதிகாரர்கள் பயன்படுத்தி அவரை ஆட்சியிலிருந்து அகற்றினர்.

மங்கோல் என்ற பெயர், மங்கோலிய மொழி பேசக்கூடிய மத்திய ஆசிய நாடோடிக் குழுக்கள் அனைத்தையும் குறிக்கும். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அவர்கள் செங்கிஸ் கான் தலைமையில் ஒரு மிகப் பெரிய அரசாட்சியை நிறுவினர். நவீன ரஷ்யாவின் பெரும்பகுதி, சீனா, கொரியா, தென் கிழக்கு ஆசியா, பாரசீகம், இந்தியா, மத்தியக் கிழக்கு நாடுகள், கிழக்கு ஐரோப்பா ஆகியவற்றை அவரது அரசாட்சி உள்ளடக்கி இருந்தது. அவர்களின் விரைவான குதிரைகளும் சிறந்த குதிரைப்படை உத்திகளும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்கும் மனப்பாங்கும் அரசியலைச் சூழ்ச்சித் திறத்துடன் கையாளும் செங்கிஸ்கானின் திறனும் மங்கோலியரின் வெற்றிக்குக் காரணமாகக் கூறப்படுகின்றன.

**நாற்பதின்மர் (சகல்கானி):** தகுதியிலும் வரிசையிலும் சுல்தானை அடுத்துப் பிரபுக்கள் இருந்தனர் அரசை நிர்வகிப்பதில் அவர்கள் ஒரு தீர்மானகரமான பங்கு வகித்தனர். பிரபுக்களே ஆளும் வர்க்கமாக இருந்தபோதிலும் அவர்கள், துருக்கியர், பாரசீகர், அரபியர், எகிப்தியர், இந்திய முஸ்லீம்கள் போன்ற வெவ்வேறு இனக்குழுக்களிலிருந்தும் இனங்களிலிருந்தும் வந்தனர். இல்துமிஷ், நாற்பதின்மர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களிலிருந்து தெரிவு செய்து இராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார். இல்துமிஷ் இறந்த பிறகு, ருக்னுத்தின் ஃபெரோஸை அரசனாக்க வேண்டும் என்ற இல்துமிஷின் விருப்பத்தைப் புறந்தள்ளும் அளவுக்கு அந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று. இரஸியா, தனது நலன்களைக் காத்துக்கொள்வதற்காக, அபிசீனிய அடிமை யாகுத் தலைமையில் துருக்கியரல்லாத பிரபுக்களையும் இந்திய முஸ்லீம் பிரபுக்களையும் கொண்ட ஒரு குழு அமைத்தார். எனினும் இதை அவ்விருவரையும் கொலை செய்ய வைத்த துருக்கிய பிரபுக்கள் எதிர்த்தனர். இவ்வாறாக, அரசரின் மூத்த மகனே ஆட்சிக்கு வாரிசு என்ற விதி இல்லாத நிலையில் அரசுரிமை கோரிய எதோ ஒருவர் தரப்பில் பிரபுக்கள் சேர்ந்துகொண்டனர். இது, சுல்தானைத் தெரிந்தெடுக்க உதவியது அல்லது ஆட்சி நிலைகுலைவதற்குப் பங்களித்தது. பிரபுக்கள் பல குழுக்களாக சுல்தானுக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டனர்.

எனவே அந்த நாற்பதின்மர் அமைப்பு சுல்தானியத்தின் நிலைத்தன்மைக்குப் பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது என்று கூறி, அதை பால்பன் ஒழித்தார்; இதன் மூலம் "துருக்கிய பிரபுக்கள்" ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவரது ஆணையை மீறுகிற பிரபுக்களில் நிலங்களைப் பறிமுதல் செய்தார். அலாவுதீன் கில்ஜி, ஒற்றர்களைப் பணியமர்த்தி, துருக்கியப் பிரபுக்களின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் தம்மிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு பணித்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தார்.

ஃபெரோஸ் துக்ளக்கிடம் ஓர் உயரதிகாரியாக இருந்த புகழ் பெற்ற காநி–ஜஹான், இஸ்லாமுக்கு மாறிய ஒரு பிராமணர். ஆதியில், கண்ணு என்று அறியப்பட்ட அவர், (தற்போதைய தெலங்கானாவின்) வாரங்கல்லில் நிகழ்ந்த சுல்தானியப் படையெடுப்பு ஒன்றின் போது சிறைப்பிடிக்கப்பட்டவர்.

ஜிஸியா என்பது இஸ்லாமிய அரசுகளால் அவர்களின் நிலத்தில் வாழும் இஸ்லாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும். இதன் மூலம் அவர்கள் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன. இந்தியாவில் முதன்முறையாக இஸ்லாமியர் அல்லாதார் மீது ஜிஸியா விதித்தவர் குத்புதீன் ஐபக். முகலாய அரசர் அக்பர், பதினாறாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார்.

இந்தியாவில் இஸ்லாமியர் ஆட்சியின் முக்கியத்துவம் என்னவென்றால், இஸ்லாமிய ஆட்சியாளர்களின் சூறையாடல்கள், அபகரிப்புகள் இருந்தாலும், நீண்ட காலம் இந்து மதத்துடன் சக வாழ்வு வாழ்வதற்கான மன ஏற்பு தொடக்க காலம் முதல் காணப்படுவதே. இந்தியாவை வென்றடக்கிய முகமது கோரி, தமது தங்க நாணயங்கள் சிலவற்றில் பெண் கடவுள் லட்சுமியின் உருவத்தைப் பொறித்திருக்கிறார். 1325இல் முகமது–பின் –துக்ளக், சமணத் துறவிகளுக்கு அனைத்து அரசு அலுவலர்களும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று ஒரு ஆணை வெளியிட்டார். அவரேகூட ஹோலி பண்டிகையில் பங்கெடுத்ததோடு யோகிகளுடன் நல்ல நட்புடன் இருந்திருக்கிறார்.

'பல கடவுள் வழிபாட்டாளர்களையும், இந்துக்களையும், மங்கோலியர்களையும், நாத்திகர்களையும் பஞ்சணையில் அமர வைத்து சகல மரியாதைகளும் செய்கிறார்கள்' என்று இஸ்லாமிய ஆட்சியாளர்கள் குறித்து பரணி வெறுப்புடன் எழுதுகிறார். மேலும், "இந்துக்கள் எவ்வளவு வரி செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து கோவில்கள் கட்டிக்கொள்ளவும், திருவிழாக்கள் நடத்தவும், இஸ்லாமிய வேலையாட்களை வைத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இஸ்லாமியர்களுக்கு நிகராக ராய், ராணா, தாகூர், ஹா, மஹ்தா, பண்டிட் போன்ற அரச பட்டங்கள் இந்துக்களுக்கும் வழங்கப்படுகின்றன" என்றும் பரணி எழுதுகிறார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று, முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தில் வந்த ஆலம் ஷா – Abraham Eraly, The Age of Wrath.

**கலீபா**

முகமது நபியின் வாரிசாகக் கருதப்படும் கலீபாக்கள் ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகத்தின் குடிமை, மதம் தொடர்பான விவகாரங்களின்மீது அதிகாரம் செலுத்தி வந்தனர். 1258இல் பாக்தாத் நகரை மங்கோலியர் கைப்பற்றும்வரை கலீபா அந்நகரை ஆட்சி செய்தார். பின்னர் எகிப்தில் 1516–17ஆம் ஆண்டுகளில் ஆட்டோமானியர் வெற்றி பெறும்வரை ஆட்சி செய்தார். இதன்பின்னர் ஆட்டோமானிய சுல்தான்களே

இப்பதவியை வகித்து வந்தனர். ஆட்டோமானியப் பேரரசு நீக்கப்பட்டு (1920) முஸ்தபா கமால் அத்தாதுர்கின் தலைமையில் துருக்கியக் குடியரசு உருவானபோது இக்கலீபா பதவி ஒழிக்கப்பட்டது.

சுல்தான் ஃபெரோஸ் துக்ளக், 1,80,000 அடிமைகள் வைத்திருந்ததற்காகப் புகழ்பெற்றவர். இதில் 12,000 பேர் கைவினைஞர்களாகப் பணிபுரிந்தனர். அவரது முதன்மை அமைச்சர் கான் ஜஹன் மக்பூல் 2000த்துக்கும் அதிகமான பெண் அடிமைகளை வைத்திருந்தார்.

இல்துமிஷ் கட்டி முடித்த போது 72.5 மீட்டர் உயரமிருந்த குதுப் மினார், ஃபெரோஸ் ஷா துக்ளக் மேற்கொண்ட பழுதுநீக்கும் பணிகளால் 74 மீட்டராக உயர்ந்தது. 379 படிகள் கொண்ட மினார், அதன் உயரத்துக்காகவும், மாடிகளை அடையாளப்படுத்துகிற துருத்தி நிற்கிற உப்பரிகைகளுக்காகவும், படிப்படியான கோபுரச் சரிவுக்காகவும், கோபுரத்தைச் சுற்றிலுமுள்ள சரிவான விளிம்பு அலங்கரிப்புகள் ஒரு வளைவு தோற்றத்தைத் தருவதற்காகவும் சிறப்புடையது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 8ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின்போது சிந்து அரசர் ________ ஆவார்.

அ) ஹஜாஜ்

ஆ) முகமது –பின் – காஸிம்

இ) ஜெயசிம்ஹா

ஈ) தாகிர்

2. கஜினி மாமுது, இந்தியாவுக்குள் _____________ முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினார்.

அ) 15

ஆ) 17

இ) 18

ஈ) 19

3. பாலம் பவோலி கல்வெட்டு ____________ மொழியில் இருக்கிறது.

அ) சமஸ்கிருதம்

ஆ) பாரசீக மொழி

இ) அரபி

ஈ) உருது

4. உலகப் புகழ்பெற்ற கஜூராஹோ கோவிலைக் கட்டியவர்கள் ____________

அ) ராஷ்டிரகூடர்

ஆ) டோமர்

இ) சண்டேளர்

ஈ) பரமர்

5. மம்லுக் என்ற பெயர் ஒரு ___________க்கான அரபுத் தகுதிச்சுட்டாகும்.

அ) அடிமை

ஆ) அரசர்

இ) இராணி

ஈ) படைவீரர்

6. இபின் பதூதா ஒரு ___________ நாட்டுப் பயணி

அ) மொராக்கோ

ஆ) பெர்சியா

இ) துருக்கி

ஈ) சீனா

7. அரசப் பதவியை விடுத்து, தில்லியிலிருந்து விலகி முப்பதாண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான் ___________

அ) முபாரக் ஷா

ஆ) ஆலம் ஷா

இ) கிசர் கான்

ஈ) துக்ரில் கான்

8. சரியாகப் பொருத்தி, விடையைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| i) ராமச்சந்திரர் | 1. காகதீயர் |
| ii) கான் –இ –ஜஹான் | 2. பத்மாவத் |
| iii) மாலிக் முஹமத் ஜெய்சி | 3. மான் சிங் |
| iv) மன் மந்திர் | 4. தேவகிரி |

அ) 2, 1, 4, 3

ஆ) 1, 2, 3 ,4

இ) 4, 1, 2, 3

ஈ) 3, 1, 2, 4

**I.சரியான விடையைத் தேர்வு செய்க**

**விடைகள்**

1. ஈ) தாகிர் 2. ஆ) 17 3. அ) சமஸ்கிருதம் 4. இ) சண்டேளர் 5. அ) அடிமை 6. அ) மொராக்கோ 7. ஆ) ஆலம் ஷா 8. இ) 4, 1, 2, 3

**[11] பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள்**

**உள்ளாட்சித் தேர்தல்களும் உத்திரமேரூர் கல்வெட்டுகளும்:**

பிரம்மதேயங்களில் (பிராமணர்களுக்கு வரிவிலக்குடன் அளிக்கப்பட்ட நிலம்) ஒன்றாக இருந்த உத்திரமேரூரில் (உத்தரமல்லூர் சதுர்வேதி மங்கலம்) கிடைத்த இரு கல்வெட்டுக் குறிப்புகள் (பொ.ஆ. 919இலும் 921இலும் அறிவிக்கப்பட்டவை) மூலம் சோழர் கால உள்ளாட்சித் தேர்தல் முறையை அறிய முடிகிறது. இவை ஒரு பிராமணக் குடியிருப்புக்கான பணிகளை மேற்கொள்வதற்கு வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த உறுப்பினரைத் தேர்வு செய்யும் முறையைத் தெரிவிக்கின்றன. அதன்படி, கிராமம் 30 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வானவர்கள் அனைவரும் சேர்ந்து வெவ்வேறு குழுக்களை உருவாக்குவார்கள். அவை பொதுப்பணிக்குழு, குளங்களுக்கான குழு, தோட்டங்களுக்கான குழு, பஞ்ச நிவாரணக் குழு, தங்கம் தொடர்பான குழு ஆகியவாகும்.

உறுப்பினராகப் போட்டியிடுவோரின் தகுதிகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆண்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும். போட்டியாளர் 35 வயதுக்கு மேலும் 70 வயதுக்குக் கீழும் உள்ளவராக இருக்க வேண்டும். சொத்தும் சொந்த வீடும் உடையவாரக இருக்க வேண்டும். வேதங்களிலும் பாஷ்யங்களிலும் தேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு பிரிவில் போட்டியிடக்கூடிய அனைவருடைய பெயர்களும் தனித்தனிப் பனையோலைகளில் எழுதப்பட்டு, அவை ஒரு பானையில் இடப்படும் (குடவோலை). சபையில் வயதில் மூத்தவர் ஒரு சிறுவனை அழைத்து, பானையிலிருந்து ஓர் ஓலையை எடுக்கும்படி கூறுவார். அந்தச் சிறுவன் எடுக்கும் ஓலையில் உள்ள பெயருக்குரியவரே உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஆவார்.

வரியாக வசூலிக்கப்பட்ட நெல் 'களம்' என்ற அலகின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. ஒரு களம் என்பது 28 கிலோ ஆகும். முதலாம் ராஜராஜன் வரி வசூலை முறைப்படுத்தினார். ஒரு வேலி (6.5 ஏக்கர்) நிலத்திற்கு 100 களம் வரியாக வசூலிக்கப்பட்டது. வேலியின் அலவு என்பது மண்வளம், போகங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாறுபடுகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழன் மேற்கொண்ட பாசனப்பணி குறிப்பிடத்தக்கது. அங்குள்ள ஏரியில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் 16 மைல் நீளமுள்ள ஓர் உறுதியான கட்டுமானத்தை அவர் எழுப்பியுள்ளார். அதை இராஜேந்திர சோழன் 'ஜலமய ஜெயஸ்தம்பம்' என்று குறிப்பிடுகிறார். அதற்கு, 'நீரில் கிடைத்த வெற்றியின் நினைவாக எழுப்பிய தூண்' என்று பொருள். 100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இடத்துக்கு வந்த அரேபிய வரலாற்றாசிரியரான அல்பெரூனி இக்கட்டுமான அமைப்பைக் கண்டு வியந்தார். "எங்கள் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். ஆனால், அதனை அவர்களால் விவரிக்க இயலாது. அது போன்ற ஒன்றை அவர்களால் கட்டவும் முடியாது" என்று அல்பெரூனி பதிவு செய்துள்ளார். சான்று: ஜவஹர்லால் நேரு, *Glimpses of World History*.

**பெருவுடையார் (பிரகதீசுவரர் கோவில்)**

இராஜராஜேஸ்வரம், பிரகதீசுவரர் கோவில் என்று அழைக்கப்படும் தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டடக்கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் ஆகிய கலைகளுக்குத் தன்னிகரற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இராஜராஜனின் ஆட்சி அதிகாரத்துக்கு இக்கோவில் அழுத்தமான சட்ட அங்கீகாரமாக உள்ளது. இக்கோவிலின் கருவறைமீது அமைக்கப்பட்ட 190அடி உயரத்தால் ஆன விமானம் 80டன் எடை கொண்ட மூடிய அமைப்பைக் கொண்டுள்ளது. கருவறையின் வெளிச்சுவர்களில் பொறிக்கப்பட்ட இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் (பிச்சை ஏற்கும் கோலத்தில் உள்ள சிவன்) ஆகிய உருவங்கள் சிறப்பு அம்சங்கள் ஆகும். புராணங்களிலும் காவியங்களிலும் காணப்படும் காட்சிகள் சுவரோவியங்களாகவும் குறும் சிற்பங்களாகவும் இக்கோவில் சுவர்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. சோழ

ஆட்சியாளர்களின் சமயக் கருத்தியலை இவை வெளிப்படுத்துகின்றன. நடனப் பெண்கள், இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள் இவை நாடு என்ற பகுதிகளைச் சேர்ந்த பல குடியிருப்புகளிலிருந்து தேர்வு செய்யப்பட்டுக், கோவில்களோடு இணைக்கப்பட்டனர். கோவில்களில் பக்திப்பாடல்களைப் பாடுவதற்காகப் பாடகர்கள் நியமிக்கப்பட்டனர்.

**சம்புவராயர்கள்:** சம்புவராயர்கள், ராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ அரசர்களின் ஆட்சிக்காலத்தில் வட ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளில் வலிமை படைத்த குறுநில மன்னர்களாக விளங்கினர். தாங்கள் சார்ந்திருந்த பேரரசுகளுக்கு ஆதரவாக போர்களில் ஈடுபட்டனர். பல சமயங்களில் தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர். பதிமூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாண்டியர் ஆட்சியின் இறுதி வரை சம்புவராயர்கள் பாலாறு பகுதியில் அரசியல் செல்வாக்குடன் விளங்கினர். அவர்களின் அரசு இராஜ கம்பீர ராஜ்யம் எனப்பட்டது. அதன் தலைநகரம் படைவீட்டில் அமைந்திருந்தது. வீர சோழ சம்புவராயனின் கல்வெட்டுகள் (1314 – 1315) பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சம்புவராயர்கள் உயர்ந்த பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். எடுத்துக்காட்டாக, சகலலோக சக்ரவர்த்தி(ன்) வென்று மண்கொண்ட சம்புவராயன் (1322 – 1323), சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் (1337 – 1338) ஆகியோரைக் கூறலாம். சகலலோக சக்ரவர்த்தி(ன்) இராஜநாராயணன் சம்புவராயன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்து, பின்னாட்களில் விஜயநகரத்தின் குமார கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முறியடிப்புப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை கம்பணரால் தோற்கடிக்கப்பட்டார். இந்த முறியடிப்புக்குப் பிறகுதான் குமார கம்பணர் தெற்கு நோக்கி மதுரை வரை படையெடுத்துச் சென்றார். குமார கம்பணர் மதுரை சுல்தானைத் தோற்கடித்து முழுவெற்றி பெற்றார்.

பாண்டிய நாட்டுக்கு வருகை தந்த வெனீஸிய (இத்தாலி) பயணி மார்க்கோபோலோ நேர்மையான நிர்வாகத்துக்காகவும் வெளிநாட்டுவணிகர்களைச் சிறந்த முறையில் நடத்தியற்காகவும் பாண்டிய அரசரைப் பாராட்டியுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணமுறை ஆகியவை மார்க்கோ போலோவின் பயணக் குறிப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பாண்டியர் கால குதிரை வணிகம் குறித்து வாசா பின்வருமாறு பதிவு செய்துள்ளார்: "காயல் மற்றும் இந்தியாவின் பிற துறைமுகங்களில் ஏறத்தாழ 10,000 குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் 1,400 குதிரைகள் ஜமாலுதீனுக்குச் சொந்தமானவை. குதிரையின் சராசரி விலை 220 செம்பொன் தினார்களாகும்".

சிந்தாமணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், திருவாடனை, மகாபலிபுரம் ஆகியவை சுறுசுறுப்பான கடல் வணிக அமையங்களாக இருந்தன என்பதை கல்வெட்டுகள் வாயிலாக அறிகிறோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

மணிமேகலையை இயற்றிய சீத்தலைச்சாத்தனார் மதுரையைச் சேர்ந்தவர் ஆவார்.

சைவத் துறவியான திருஞானசம்பந்தர் அரிகேசரியை சமண மதத்திலிருந்து சைவ மதத்துக்கு மாற்றினார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. _______________ கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.

அ) மூன்றாம் குலோத்துங்கன்

ஆ) முதலாம் இராஜேந்திரன்

இ) முதலாம் இராஜராஜன்

ஈ) பராந்தகன்

2. ________________ படுகையில் இருந்த சோழ அரசின் மைப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது.

அ) வைகை

ஆ) காவிரி

இ) கிருஷ்ணா

ஈ) கோதாவரி

3. முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இணைந்து ______________ ஆண்டுகள் சோழ அரசை ஆட்சி செய்தார்கள்.

அ) 3

ஆ) 2

இ) 5

ஈ) 4

4. ______________ ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.

அ) 28 கி.கி

ஆ) 27 கி.கி

இ) 32 கி.கி

ஈ) 72 கி.கி

5. கெடா __________இல் உள்ளது.

அ) மலேசியா

ஆ) சிங்கப்பூர்

இ) தாய்லாந்து

ஈ) கம்போடியா

6. முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் _____________ என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

அ) நாட்டார்

ஆ) மாநகரம்

இ) நகரத்தார்

ஈ) ஊரார்

7. பொருத்துக.

i) படை முகாம் 1. படை வீடு

ii) புறக்காவல் படைகள் 2. தண்டநாயகம்

iii) தலைவர் 3. நிலைப்படை

iv) படைத்தளபதி 4. படைமுதலி

அ) 1, 3, 4, 2

ஆ) 4, 2, 1, 3

இ) 2, 1, 3, 4

ஈ) 2, 3, 1, 4

8. ____________இல் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினார்.

அ) இலங்கை

ஆ) வட இந்தியா

இ) கேரளம்

ஈ) கர்நாடகம்

9. ______________ பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.

அ) மதுரை

ஆ) காயல்பட்டினம்

இ) கொற்கை

ஈ) புகார்

10. பொ.ஆ. 800ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ___________ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.

அ) மத்திய அரசு

ஆ) கிராமம்

இ) படை

ஈ) மாகாணம்

11. வறட்சிப்பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் _______________ ஐக் கட்டினார்கள்.

அ) அகழிகள்

ஆ) மதகுகள்

இ) அணைகள்

ஈ) ஏரிகள்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. ஆ) முதலாம் இராஜேந்திரன் 2. ஆ) காவிரி 3. ஆ) 2 4. அ) 28 கி.கி 5. அ) மலேசியா 6. ஆ) மாநகரம் 7. அ) 1, 3, 4, 2 8. ஆ) வட இந்தியா 9. இ) கொற்கை 10. ஆ) கிராமம் 11. ஈ) ஏரிகள்

## [12] பாமினி மற்றும் விஜயநகர அரசுகள்

விஜயநகர அரசர்கள் 'வராகன்' என்று குறிப்பிடப்பட்ட தங்க நாணயங்களை அதிக எண்ணிக்கையில் வெளியிட்டனர். (இது தமிழில் பொன் என்றும் கன்னடத்தில் ஹொன்னு என்றும் குறிப்பிடப்பட்டது.) இந்தத் தங்க நாணயங்கள் வெவ்வேறு இந்து தெய்வங்களின் உருவங்களையும் காளை, யானை, கன்ட பெருண்டா என்ற கற்பனைப் பறவை (இரட்டைக் கழுகு வடிவத்தில் உள்ள இந்த உருவம் தனது அலகிலும் நகத்திலும் யானையைக் கொத்திக்கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது) ஆகிய விலங்கு உருவங்களையும் தாக்கியுள்ளன. நாணயத்தில் அரசனுடைய பெயர் நகரி அல்லது கன்னட எழுத்து வடிவத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.



கிருஷ்ணதேவராயர் – தங்க நாணயங்கள்

ஆகாய நீல வண்ணத்திலுள்ள ரத்தினக்கற்கள் ஓரளவு விலை மதிப்புள்ள கற்களாகும். இம்மாணிக்கக் கற்களினால் இமைக்கப்பட்ட அரியணை பாரசீக அரசர்களின் ஒரு சிம்மாசனமாக இருந்தது என பிர்தௌசியின் ஷாநாமா குறிக்கின்றது.

**கோல்கொண்டா கோட்டை:** ராஜா கிருஷ்ண தேவ் என்ற வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்ட காகத்திய வம்ச அரசர் கட்டிய கோட்டை இது. 1495 – 1496இல் இக்கோட்டை சுல்தான் குலிகுதுப்ஷாவிற்கு ஒரு ஜாகீராகத் (நிலமாக) தரப்பட்டது. அவர் அக்கோட்டையைக் கருங்கற்கள் கொண்டு புனரமைத்தார். அதன்பின் இக்கோட்டைப் பகுதி இருந்த நகரம் முகம்மது நகர் எனப்பட்டது. பிற்காலத்தில் பாமினி அரசின் கைவசமாகி, அதன்பின்னர் குதுப்ஷாகி வம்ச அரசின் தலைநகரானது. குதுப்ஷாகி வம்சத்தின் ஐந்தாவது சுல்தானான முகம்மது குலி குதுப்ஷா காலத்தில் கம்பீரமான கோட்டையாக கோல்கொண்டா கோட்டை திகழ்ந்தது. பாமினி சுல்தானியத்தின் வீழ்ச்சிக்குப்பின் இந்நகரம் வளர்ச்சியடைந்தது. 17ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாகத் திகழ்ந்தது. கோஹினூர் வைரம் உட்பட மிகச்சிறந்த வைரங்களை உலகிற்கு வழங்கியது.

கோல்கொண்டா கோட்டை ஹைதராபாத்திலிருந்து 11 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மலைமீது 120 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கோல்கொண்டா கோட்டை அதன் ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டடக் கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்த பகுதி பாலா ஹிசார் என்றழைக்கப்படுகிறது. இதில் ரகசிய நிலத்தடி சுரங்கப்பாதை உள்ளது. அது தர்பார் அறையிலிருந்து மலையின் கீழுள்ள அரண்மனைக்குச் செல்வதாகச் சொல்லப்படுகின்றது. இக்கோட்டையில் அரச அமையும் (Durbar Hall) உள்ளது. இதில் ஒரு மாளிகையும் உள்ளது.

கோல்கொண்டா கோட்டையில் குதுப்ஷாகியின் கல்லறையும் உள்ளது. இதில் இருவிதத் தனி வழிகள் உள்ளன. இவை கோல்கொண்டா கட்டடக்கலையின் சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. பீரங்கிகள், பாலங்கள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள், தொழுவங்கள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும். இக்கோட்டையின் நுழைவாயில் பகுதி பதேதர்வாசா (அ) வெற்றி நுழைவாயில் என்றழைக்கப்படுகிறது. ஔரங்கசீப் எட்டு மாதங்கள் முற்றுகையிட்டு 1687இல் ஆப்கானிய வாசல் காப்பாளரின் துரோகம் காரணமாக கோல்கொண்டா கோட்டையை அதன் ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.

சில மரபுக் கதைகளின்படி புகழ்பெற்ற சைவத் துறவும், சமஸ்கிருத அறிஞருமான வித்யாரண்யர் (மாதவர்) அறிவுறுத்தலுக்கு இணங்க ஹரிஹரரும் புக்கரும் சுல்தான் துக்ளக்கிடம் செய்துவந்த பணியிலிருந்து விலகி, சுல்தானால் சிறை பிடிக்கப்பட்டபோது முஸ்லீம் மதத்திற்கு மாறியிருந்த இவர்கள் மீண்டும் இந்துக்களாக மாறினர் என்று கூறப்படுகிறது. விஜயநகரப் பேரரசு நிறுவியதில் வித்யாரண்யர் முக்கியப் பங்காற்றினார். ஆனால் இது சந்தேகத்திற்குரியது என்பர். ஏனெனில் சில கல்வெட்டுச் சான்றுகளின்படி வித்யாரண்யர் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர். அதாவது விஜயநகரப் பேரரசு உருவான அறுபது ஆண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்தவர்.

**இராமநாதபுரம், புதுக்கோட்டை சிற்றரசுகள்:** இராமநாதபுரம் சிற்றரசு மதுரை நாயக்க அரசர் முத்துகிருஷ்ணப்ப நாயக்கரால் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்க ஆண்டுகளில் துவங்கிவைக்கப்பட்டது. போர் புரியும் மரபினைக் கொண்டிருந்த இப்பகுதி வாழ் மக்கள் பாண்டிய சோழ விஜயநகர அரசர்களிடம் படை வீரர்களாகப் பணியாற்றினர். மேலும் திருநெல்வேலி, தென் தமிழகப் பகுதி ஆகியவற்றிலும் பரவினர். நாயக்க மன்னர்களின் படைகளிலும் பணியாற்றிய இவர்கள், பரம்பரைக் காவல்காரர்களாக கிராமங்கள் , கோவில்கள் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பணியையும் செய்து வந்தனர். இராமேஸ்வரம் கோவில், உடையான் சேதுபதி (இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீர் இணைப்பின் அல்லது பாலத்தின் தலைவர் என்று பொருள்) என்பவரின் பாதுகாப்பின் கீழிருந்தது.

புதுக்கோட்டை ஒரு சிறிய சிற்றரசாக மதுரை மற்றும் தஞ்சாவூர் நாயக்க அரசுகளின் இடையில் அமைந்திருந்தது. முந்தைய காலத்தில் சோழ பாண்டிய அரசுகளுக்கிடையே இடைப்படு நாடாக இருந்துள்ளது. இராமநாதபுரம் பகுதி வாழ் மக்களைப் போலவே புதுக்கோட்டை பகுதி வாழ் மக்களும் போர் புரியும் மரபை சார்ந்தவர்களாவர். இதன் காரணமாகவே தொண்டைமான்களின் தலைமையில் இப்பகுதி ஒரு சிற்றரசு என்னும் மதிப்பைப் பெற்றது. இத்தொண்டைமான்கள் சேதுபதி, மதுரை, தஞ்சை நாயக்க அரசர்களின் அரண்மனைகளில் முக்கியப் பணிகளில் பணியாற்றினர்.

அஷ்டதிக்கஜங்கள் (எட்டு புகழ்பெற்ற கவிஞர்கள்)

அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தெனாலிராமன், துர்ஜதி, பட்டு மூர்த்தி, புணவீரபத்ரன், மல்லானா மற்றும் பனாஜி சூரனா.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஹரிஹரர் மற்றும் புக்கர் விஜயநகரப் பேரரசை ஏற்படுத்தும் முன்பாக _________ இடம் பணி செய்தனர்.

அ) காகதியர்

ஆ) ஹொய்சாளர்

இ) பீஜப்பூர் சுல்தான்

ஈ) யாதவர்

2. கீழ்க்கண்டவற்றை காலவரிசைப்படுத்துக.

அ) சங்கம வம்சம், ஆரவீடு வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம்

ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

இ) சாளுவ வம்சம், சங்கம வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

ஈ) சங்கம வம்சம், துளுவ வம்சம், சாளுவ வம்சம், ஆரவீடு வம்சம்

3. விஜயநகர அரசின் அரச முத்திரை __________

அ) பன்றி

ஆ) புலி

இ) மீன்

ஈ) வில்

4. ___________ என்ற நூலை கங்காதேவி எழுதினார்.

அ) மனுசரிதம்

ஆ) ஆமுக்தமால்யதா

இ) பாண்டுரங்க மகாத்மியம்

ஈ) மதுரா விஜயம்

5. _____________ சங்கம வம்சத்தின் சிறந்த ஆட்சியாளராகக் கருதப்பட்டார்.

அ) முதலாம் தேவராயர்

ஆ) இரண்டாம் தேவராயர்

இ) கிருஷ்ணதேவராயர்

ஈ) வீர நரசிம்மர்

6. கிருஷ்ணதேவராயர் தன் வெற்றிகளின் நினைவாக வெற்றித் தூணை எழுப்பிய இடம் _______________

அ) பெல்காம்

ஆ) கட்டாக்

இ) சிம்மாச்சலம்

ஈ) இராஜமகேந்திரவரம்

7. எந்த இரு பகுதிகளிடையே இடைப்படு நாடாகப் புதுக்கோட்டை இருந்தது ______________

அ) சோழ மற்றும் விஜயநகர அரசுகள்

ஆ) சோழ மற்றும் பாண்டிய அரசுகள்

இ) சேர மற்றும் பாண்டிய அரசுகள்

winmeen.com

ஈ) சோழ மற்றும் சேர அரசுகள்

8. ஷா நாமாவை எழுதியவர் _________

அ) பிர்தௌசி

ஆ) இபன் பதூதா

இ) நிக்கோலோ டி கோன்டி

ஈ) டோமிங்கோ பயஸ்

9. முகம்மது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் ______________

அ) பெரார்

ஆ) பீஜப்பூர்

இ) பீடார்

ஈ) அகமது நகர்

10. ____________ கோல்கொண்டா கோட்டையைக் கட்டினார்.

அ) இராஜா கிருஷ்ண தேவ்

ஆ) சுல்தான் குலி–குதுப்–உல்–முல்க்

இ) முகமது கவான்

ஈ) பாமன்ஷா

11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) விஜயநகர அரசின் அரசர்கள் ஐந்து வம்சங்களாக சுமார் 300 ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

ஆ) ஆந்திரக் கடற்கரைப் பகுதிகளில் ஒரிசாவின் கஜபதி மற்றும் பாமினி அரசுகளிடையே கடும் போர் நடைபெற்றது.

இ) அப்துல் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியிலிருந்த சாமரின் அவைக்கு வந்தார்.

ஈ) பாமினி அரசர்கள் அதிக அளவில் தங்க நாணயங்களை பல்வேறு வகையான தெய்வங்களின் உருவங்களுடன் வெளியிட்டனர்.

12. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i) முதலாம் முகமது ஏற்படுத்திய சிறந்த அரசு அவருக்குப் பின் வந்த சுல்தான்களாலும் மராத்தியர்களாலும் பின்பற்றப்பட்டது.

ii) கவான் போர்ச்சுகீசிய வேதியியல் நிபுணர்களைக் கொண்டு வெடிமருந்தைத் தயார் செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றைக் கற்றுத்தரச் செய்தார்.

அ) i) மற்றும் (ii) சரி

ஆ) i) மற்றும் (ii) தவறு

இ) (i) சரி (ii) தவறு

winmeen.com

ஈ) (i) தவறு (ii) சரி

13) கூற்று: பாமன்ஷா மிகச்சரியாகத் தாக்குதல் தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்ட வீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோரும் திறை செலுத்த வைத்தார்.

காரணம் : இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமன்று.

ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்றும் தவறு காரணமும் தவறு

ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும்.

14) பொருத்துக.

| | |
|---|---|
| i) அப்துல் ரசாக் | 1. ரஷ்யா |
| ii) நிகிடின் | 2. சாளுவநாயக்கர் |
| iii) டோமிங்கோ பயஸ் | 3. பாரசீகம் மற்றும் நூனிஸ் |
| iv) செல்லப்பா | 4. போர்த்துகல் |

அ) 1, 2, 3, 4

ஆ) 4, 3, 2, 1

இ) 2, 1, 4, 3

ஈ) 3, 1, 4, 2

**I. சரியான விடையைத் தேர்வு செய்க**

**விடைகள்**

1. ஆ) ஹொய்சாளர் 2. ஆ) சங்கம வம்சம், சாளுவ வம்சம், துளுவ வம்சம், ஆரவீடு வம்சம் 3. அ) பன்றி 4. ஈ) மதுரா விஜயம் 5. ஆ) இரண்டாம் தேவராயர் 6. இ) சிம்மாச்சலம் 7. ஆ) சோழ மற்றும் பாண்டிய அரசுகள் 8. அ) பிர்தௌசி 9. இ) பீடார் 10. அ) இராஜா கிருஷ்ண தேவ் 11. இ) அப்துல் ரசாக் ஒரு பாரசீகத் தூதுவராகக் கொச்சியிலிருந்த சாமரின் அவைக்கு வந்தார். 12. இ) (i) சரி (ii) தவறு 13. ஈ) கூற்று சரி, காரணத்திற்கு கூற்று சரியான விளக்கமாகும். 14. ஈ) 3, 1, 4, 2

## [13] பண்பாட்டு ஒருமைப்பாடு: இந்தியாவில் பக்தி இயக்கம்

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. அத்வைதம் என்னும் தத்துவத்தை இந்து மதத்திற்கு வழங்கியவர் _________

அ) ஆதிசங்கரர்

ஆ) இராமானுஜர்

இ) இராமானந்தர்

ஈ) சைதன்யர்

2. வைதீக வேதப்பிரிவுகளுக்கும், சிரமணப் பிரிவுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களைப் பற்றிக் குறிப்பிடுவது __________

அ) இராமாயணம்

ஆ) பாகவத புராணம்

இ) திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள்

ஈ) பால லீலா

3. கூன் பாண்டியன் என்று அழைக்கப்பட்டவர் _________

அ) முதலாம் மகேந்திரவர்மன்

ஆ) மாறவர்மன் அரிகேசரி

இ) நரசிம்மவர்மன்

ஈ) சுந்தரபாண்டியன்

4. சமண மதத்திலிருந்தபோது அப்பர் இவ்வாறு அறியப்பட்டார் _________

அ) அரிசேனா

ஆ) தீர்த்தங்கரர்

இ) சிவஞான சித்தியார்

ஈ) தர்மசேனர்

5. பக்கீர் எனக் குறிப்பிடப்படுபவர் ____________

அ) இஸ்லாமிய ஞானி

ஆ) பௌத்தத் துறவி

இ) இந்துத் துறவி

ஈ) சீக்கிய குரு

6. மாதாவாச்சாரியார் ___________ தத்துவப் பள்ளியைச் சார்ந்தவர்.

அ) துவைதம்

ஆ) அத்வைதம்

இ) விசிஷ்டாத்வைதம்

ஈ) புஷ்டி மார்க்கம்

7. இராமானந்தரின் சீடர் _____________

அ) சைதன்யர்

ஆ) மீராபாய்

இ) குருநானக்

ஈ) கபீர்

winmeen.com

8. முதன்முதலாக இந்திமொழியில் தனது மதத் தத்துவப் பிரச்சாரத்தை மேற்கொண்டவர் ___________

அ) ரவிதாஸ்

ஆ) இராமானந்தர்

இ) கபீர்

ஈ) நாமதேவர்

9. அக்பரின் அரசவையில் "ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர்" என்று அறியப்பட்டவர் _____________

அ) சூர்தாஸ்

ஆ) துக்காராம்

இ) இராமானந்தார்

ஈ) மீராபாய்

10. மராத்திய மன்னர் சிவாஜியின் சமகாலத்தவர் ___________ ஆவார்.

அ) இராமானந்தர்

ஆ) மீராபாய்

இ) சூர்தாஸ்

ஈ) துக்காராம்

11. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) தனது தொடக்ககால வாழ்வில் சைவராக இருந்த அப்பர் தனது தமைக்கையால் சைவ மதத்திலிருந்து சமண மதத்திற்கு மாறினார்.

ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர்.

இ) இராம பக்தியை முன்னிலைப்படுத்தி வங்காள வைணவர்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றனர்.

ஈ) பௌத்த மத நூல்களில் ரவிதாஸின் பக்திப்பாடல்கள் இணைக்கப்பட்டுள்ளன.

12. கூற்று: மத சீர்திருத்தவாதிகள் ஒரு கடவுள் கொள்கையைப் போதித்தனர்.

காரணம்: அவர்கள் சிலை வழிபாட்டை விமர்சித்தனர்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று தவறு; காரணம் தவறு

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி

13. பொருத்துக.

| | |
|---|---|
| i) கபீர் | 1. சாகித்திய லாகிரி |
| ii) சூர்தாஸ் | 2. ஷேக் தாதி |

winmeen.com

iii) சூபியிஸம் 3. சம்பந்தர்

iv) கூன் பாண்டியன் 4. நெசவாளர்

அ) 2, 3, 4, 1

ஆ) 4, 1, 2, 3

இ) 2, 4, 3, 1

ஈ) 3, 4, 2, 1

**விடைகள்**

1. அ) ஆதிசங்கரர் 2. இ) திருத்தொண்டர்களின் புகழ் பாடும் தொகுப்புகள் 3. ஆ) மாறவர்மன் அரிகேசரி 4. ஈ) தர்மசேனர் 5. அ) இஸ்லாமிய ஞானி 6. அ) துவைதம் 7. ஈ) கபீர் 8. ஆ) இராமானந்தர் 9. அ) சூர்தாஸ் 10. ஈ) துக்காராம் 11. ஆ) சூஃபி இயக்கத்தவர் கடவுளை அழகின் உச்சமாகக் கருதினர் 12. இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 13. ஆ) 4, 1, 2, 3

## [14] முகலாயப் பேரரசு

பீரங்கியைப் பயன்படுத்தும் ராணுவப் படைப்பிரிவு பீரங்கி படை (Artillery) ஆகும். இதை இடம் விட்டு இடம் கொண்டு செல்லலாம். பொதுவாக ஒருவருக்கும் மேற்பட்ட நபர்களால் இவை இயக்கப்படும். வெடிமருந்து முதன்முதலில் சீனர்களால் கண்டுபிடிக்கப்பட்டு கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவை அடைந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து இது துப்பாக்கிகளிலும் பீரங்கிகளிலும் பயன்படுத்தப்பட்டது. பாபருக்கு முன்பாக இந்தியாவில் போர்களில் பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை.

பாபரின் இறப்பைப் பற்றி ஒரு கதையுள்ளது. அவருடைய மகன் ஹுமாயூன் நோய் வாய்ப்பட்டிருந்தார். மகன் மீது கொண்டிருந்த பாசத்தால் மகன் உடல்நலம் பெற்றால் தனதுயிரை ஈவதாக பாபர் பிராத்தனை செய்தார். ஹுமாயூன் நோயிலிருந்து மீண்டார்.

**ஜாகீர்தாரிமுறை:** இது ஒரு நில உடைமை முறையாகும். தில்லி சுல்தானியர் காலத்தில் இம்முறை வளர்ச்சி பெற்றது. இம்முறையின் கீழ் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வரிவசூல் செய்கின்ற அதிகாரமும் அப்பகுதியை நிர்வகிக்கிற அதிகாரமும் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும்.

**ஜமீன்தாரி :** இச்சொல் மற்றொரு நில உடைமை முறையைக் குறிப்பதாகும். பாரசீக மொழியில் ஜமீன்தார் என்ற சொல்லுக்கு நிலத்தின் உடைமையாளர் என்று பொருள். முகலாயர் காலத்தில் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தோரே ஜமீன்தார்களாக இருந்தனர். அக்பர் பிரபுக்களுக்கும் முந்தைய அரச குடும்பங்களின் வழித்தோன்றல்களுக்கும் நிலங்களை வழங்கி அவற்றை பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையையும் வழங்கினார். ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் வரி வசூல் செய்து ஒரு குறிப்பிட்ட தொகையை அரசுக்குச் செலுத்தினர்.

**மாலிக் ஆம்பர்:** எத்தியோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு ஓர் அடிமையாகக் கொண்டு வரப்பட்ட மாலிக் ஆம்பர், பல இடங்கள் மாறி இறுதியாக அகமதுநகர் அரசின் பிரதம மந்திரியான சங்கிஸ்கானிடம் வந்து சேர்ந்தார். மாலிக் ஆம்பர் அரசியல் விவேகம், ராணுவம் மற்றும் நிர்வாக விஷயங்களை செங்கிஸ்கானிடமிருந்து கற்றுக்கொண்டார். செங்கிஸ்கானின் மரணத்திற்குப் பின்னர் அவருடைய மனைவி மாலிக் ஆம்பரை சுந்தர மனிதராக்கினார். கடுமையான உழைப்பின் மூலம் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி

இறுதியாகத் தென்னிந்தியச் சுல்தானியங்கள் ஒன்றின் இராணுவத் தளபதியாகவும் பகர ஆளுநராகவும் ஆனார்.

தக்காணத்தில் முஸ்லீம்களும் மராத்தியர்களும் தங்கள் அரசியல் மற்றும் வட்டாரத் தனித்தன்மைகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஒருங்கிணைந்து முகலாயரின் மேலாதிக்கத்தை எதிர்த்தனர். இம்முயற்சியின் பின்னே மூளையாகச் செயல்பட்டவர் மாலிக் ஆம்பர். 1626, மே 14இல் மாலிக் ஆம்பர் தன்னுடைய 78ஆம் வயதில் மரணமடைந்தபோது அவரால் பயிற்றுவிக்கப்பட்ட மராத்தியர்கள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட சக்தியாக மாறினர்.

**தக்காண சுல்தானியம்:** மகாராஷ்டிரா, ஆந்திரா ஆகியவற்றின் பெரும் பகுதியையும் கர்நாடகத்தின் ஒரு பகுதியையும் கொண்டிருந்த பாமினி சுல்தானியம் ஒரு நூற்றாண்டுக் காலம் செல்வச் செழிப்போடு இருந்து பின்னர் சிதைவுற்றது. வலிமை வாய்ந்த பிரபுக்கள் கோல்கொண்டா (குதுப்ஷாஹி), பீஜப்பூர், (அடில்ஷாஹி), பெரார் (இமத்ஷாஹி) பீடார், (பரித் ஷாஹி) அகமதுநகர், (நிஜாம் ஷாஹி) ஆகிய இடங்களில் புதிய அரசுகளைத் தோற்றுவித்தனர். இவையனைத்தும் கூட்டாகத் தக்காணச் சுல்தானியம் என்றழைக்கப்படுகிறது.

**முகலாயர் காலத்து ஐரோப்பியக் குடியேற்றங்கள்:**

**போர்த்துகீசியர்:** 1510இல் அல்புகர்க் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கோவாவைக் கைப்பற்றி அதைக் கீழ்த்திசை போர்த்துகீசியப் பேரரசின் தலைநகராக்கினார். தொடர்ந்து மேற்குக் கடற்கரையில் டாமன், சால்செட், பம்பாய் ஆகிய இடங்களிலும், கிழக்குக் கடற்கரையில் சென்னைக்கு அருகே சாந்தோம், வங்காளத்தில் ஹூக்ளி ஆகிய இடங்களிலும் போர்த்துகீசிய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

**டச்சுக்காரர்:** டச்சுக்காரர்கள் மசூலிப்பட்டினம் (1605), புலிக்காட் (பழவேற்காடு 1610), சூரத் (1616) , பிமிலிபட்டினம் (1641), காரைக்கால் (1645), சின்சுரா (1653) காசிம்பஜார், பாராநகர், பாட்னா, பாலசோர், நாகப்பட்டினம் (அனைத்தும் 1658), கொச்சி (1663) ஆகிய இடங்களில் தங்களது வணிகநிலையங்களை ஏற்படுத்தினர்.

**டேனியர்:** டென்மார்க் நாட்டினரும் இந்தியாவில் வணிகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் 1620இல் குடியேற்றத்தை நிறுவினார். வங்காளத்தில் செராம்பூர் அவர்களின் தலைமையிடமாக இருந்தது.

**பிரெஞ்சுக்காரர்:** சூரத் (1668), மசூலிப்பட்டினம் (1669), அப்போது சிறுகிராமமாக இருந்த புதுச்சேரி (1673), வங்காளத்தின் சந்தன்நகர் (1690) ஆகியவை பிரெஞ்சுக்காரரின் தொடக்ககாலக் குடியேற்றங்களாகும். பின்னர் மலபாரில் உள்ள மாஹி, சோழமண்டலக் கடற்கரையில் ஏனாம் (இரண்டும் 1725இல்), காரைக்கால் (1739) ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

**ஆங்கிலேயர்:** முதலில் கம்பெனி சூரத்தில் ஒரு வணிகச்சாவடியை நிறுவியது (1612இல் அங்கு ஒரு வணிக நிறுவனம் / பண்டகசாலை அமைக்கப்பட்டது). பின்னர் சென்னை (1639), பம்பாய் (1668), கல்கத்தா (1690) ஆகியவற்றைப் பெற்றது. கம்பெனி பல வணிகக் குடியேற்றங்களைப் பெற்றிருந்தாலும் கல்கத்தா வில்லியம் கோட்டையும், சென்னை புனித ஜார்க் கோட்டையும், பம்பாயிலுள்ள மாளிகையும் ஆங்கிலேயரின் மிக முக்கியமான வணிகக் குடியேற்றங்களாகும்.

தில்லி அரியணைக்கான வாரிசுரிமைப் போரில் ஔரகசீப்பிடம் தோற்றுப்போன தாராஷூகோ தத்துவஞான இளவரசர் என அறியப்பட்டார். பல்வேறு பண்பாடுகளை உரையாடலுக்கு உட்படுத்திய அவர் இந்து

மதத்திற்கும் இஸ்லாத்துக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதைக் கண்டறிந்தார். சமஸ்கிருத மொழியிலமைந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

**தாஜ்மஹால்:** தாஜ்மஹால் முகலாயக் கட்டடக் கலையின் சிறப்புமிக்க வடிவமாகும். அது இந்தியப் பாரசீக இஸ்லாமியக் கட்டடக் கலைகளின் கூட்டுக் கலவையாகும். 1612இல் திருமனமானதில் தொடங்கி 1631இல் குழந்தைப்பேறின் போது மரணமடையும் வரை இணைபிரியாமல் உள்ள துணையாய் இருந்த தனது மனைவி மும்தாஜுக்கு அழியாப் புகழை அளிப்பதற்காக ஷாஜகான் தாஜ்மகாலைக் கட்டினார். பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த இந்தியராகிய உஸ்தத் அகமத் லஹாவ்ரி என்பவர் தலைமைக் கட்டடக்கலை நிபுணராக இருந்தாலும் இவ்வளாகத்திர்கான வரைபடத்தைத் தயாரித்த பெருமை இக்காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடக்கலை நிபுணர்களைச் சாரும். இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் (மினார் என்றழைக்கப்படும் நான்கு கோபுரங்கள்) ஆகிய அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டுத் தனித்தன்மை வாய்ந்ததாக வடிவமைக்கப்பட்டது. 1632இல் கட்டிட வேலைகள் தொடங்கின. இந்தியா, பாரசீகம், உதுமானியப் பேரரசு, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கல்லறை மாடப்பணியை 1638 – 39 இல் முடிப்பதற்காகப் பணியமர்த்தப்பட்டனர். அருகிலுள்ள ஏனைய கட்டடங்கள் 1643இல் முடிவடைந்தன. அலங்கார வேலைகள் குறைந்தபட்சம் 1647 வரை தொடர்ந்தது.

**கோல்கும்பாஸ்:** 1480 முதல் 1686 வரை ஆட்சி செலுத்திய அடில் ஷாஹி மரபின் தலைநகர் பீஜப்பூர் (விஜயபுரா) ஆகும். இது கண்கவர் கட்டடங்களையும் மசூதிகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வம்சத்தின் ஏழாவது ஆட்சியாளரான முகமது அடில்ஷாவின் (1627 – 1656) மிடுக்கான கல்லறையே கோல்கும்பாஸ் (வட்டவடிவக் குவிமாடம்) ஆகும். அடில் ஷா இதனைத் தனது வாழ்நாளிலேயேக் கட்டினார். இது அடர் சாம்பல்நிறக் கற்களால் கட்டப்பட்டு மேற்பூச்சு பூசி அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்புறம் சாதாரணமாயும் ஆனால் அழகுறவும் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்தின் நான்கு வெளிமூலைகளிலும் எண்கோணக் கவிகைமாடம் உள்லது. ஒவ்வொரு கவிகைமாடமும் ஏழு அடுக்குகளையும் ஒவ்வொரு அடுக்கும் பல சாளரங்களையும் கொண்டு பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் வண்ணம் அமைந்துள்ளது. ரோமின் புனித பீட்டர் தேவாலயத்திற்கு அடுத்து உலகின் இரண்டாவது பெரிய குவிமாடம் இதுவேயாகும். இதன் உட்சுவற்றின் நீளம் 135 அடி; உயரம் 178 அடி. இங்கு சற்று உயர்த்தப்பட்ட மேடையில் முகமது அடில்ஷா அவர் மனைவி அருஸ்பீபி, அவர் மகள், பேரன், பேரனின் பிரிய மனைவி ரம்பா ஆகிய ஐவரின் கல்லறைகள் உள்ளன.

**உலகத்தின் ஏனைய பகுதிகளில்**

அக்பரின் காலமான 1556 முதல் 1605 வரை மாபெரும் அரசர்களின் காலமாகும். அவருக்கு மிக அருகேயிருந்த சமகாலத்தவர் இங்கிலாந்தின் பேரரசியார் எலிசபெத் ஆவர். இக்காலப் பகுதியில்தான் ஷேக்ஸ்பியரும் வாழ்ந்தார். இதே காலத்தில்தான் பிரான்சை போர்பார்ன் வம்சத்தின் முதல் அரசர் நான்காம் ஹென்றியும், பாரசீகத்தை சபாவி அரசவம்சத்தின் மாபெரும் வலிமைமிக்க அரசனான மகாஅப்பாஸும் ஆண்டுவந்தனர். ஐரோப்பாவில் நடைபெற்ற ஸ்பானிய ஆட்சிக்கும் எதிராக நெதர்லாந்தின் கிளர்ச்சி இக்காலத்தில் தொடங்கி ஏறத்தாழ எண்பது ஆண்டுகள் தொடர்ந்து 1648இல் முடிவடைந்தது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 1526ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பானிப்பட் போரில், பாபர் __________யை திறம்பட பயன்படுத்தியதின் மூலம் வெற்றி பெற்றார்.

அ) காலாட்படை

ஆ) குதிரைப்படை

இ) பீரங்கிப் படை

ஈ) யானைப்படை

2. கடைசிப்போரான காக்ரா போரில் பாபர் __________ எதிராகப் போரிட்டார்.

அ) ஆப்கானியர்களுக்கு

ஆ) ரஜபுத்திரர்களுக்கு

இ) துருக்கியர்களுக்கு

ஈ) மராட்டியர்களுக்கு

3. _______________ தனது உயரிய அரசியல் மற்றும் இராணுவத் திறமையினால் சௌசாப் போரில் வெற்றி பெற்றார்.

அ) பாபர்

ஆ) ஹுமாயூன்

இ) ஷெர்கான்

ஈ) அக்பர்

4. ______________ நில உடைமை உரிமை முறையில், நிலத்திற்கான வரியை வசூலிக்கும் பொறுப்பும், அந்நிலத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அ) ஜாகீர்தாரி

ஆ) மகல்வாரி

இ) ஜமீன்தாரி

ஈ) மன்சப்தாரி

5. அக்பர் நிதி நிர்வாகம் _______________ நிர்வாக முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

அ) பாபர்

ஆ) ஹுமாயுன்

இ) ஷெர்ஷா

ஈ) இப்ராஹிம் லோடி

6. இளவரசர் குஸ்ருவுடன் இணைந்து கலகத்தை தூண்டிவிட்டதற்காக ஜஹாங்கீரால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் _____________ ஆவார்.

அ) குரு அர்ஜுன் தேவ்

ஆ) குரு ஹர் கோபிந்த்

இ) குரு தேஜ் பகதூர்

ஈ) குரு ஹர் ராய்

7. ___________ தனது ஆட்சியின்போது ஜிஸியா வரியை மீண்டும் விதித்தார்.

அ) அக்பர்

ஆ) ஜஹாங்கீர்

இ) ஷாஜகான்

ஈ) ஔரங்கசீப்

8. கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில்நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் அரசர் __________ ஆவார்.

அ) அக்பர்

ஆ) ஷாஜகான்

இ) ஷெர்ஷா

ஈ) பாபர்

9. _____________ சேர்ந்த தான்சேனை அக்பர் ஆதரித்தார்.

அ) ஆக்ராவை

ஆ) குவாலியரை

இ) தில்லியை

ஈ) மதுராவை

10. பாதுஷா நாமா என்பது __________ன் வாழ்க்கை வரலாறாகும்.

அ) பாபர்

ஆ) ஹுமாயூன்

இ) ஷாஜகான்

ஈ) அக்பர்

11. ____________ ஒரு ஜோதிட ஆய்வு நூலாகும்.

அ) தஜிகநிலகந்தி

ஆ) ரசகங்காதரா

இ) மனுசரிதம்

ஈ) ராஜாவலிபதகா

12) மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை இயற்றியவர் ___________

அ) தாயுமானவர்

ஆ) குமரகுருபரர்

இ) இராமலிங்க அடிகள்

ஈ) சிவப்பிரகாசர்

13) தவறான கூற்றினைக் கண்டுபிடி.

அ) இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமியக் கட்டடக்கலையின் பாணியில் முகலாயரின் கட்டடக்கலையின் மறுவடிவமாக தாஜ்மஹால் உள்ளது.

ஆ) அக்பரது புதிய தலைநகரமான ஆக்ரா மற்றும் அதன் சுற்றுச் சுவர்களுக்குள் பல எழுச்சியூட்டும் கட்டடங்கள் உள்ளன.

இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கல்லால் கட்டப்பட்டது.

ஈ) 'புராண கிலா' ஒரு உயர்ந்த கோட்டையாகும்.

14. தவறான கூற்றினைக் கண்டுபிடி.

அ) ஒவ்வொரு மன்சப்தாருக்கும் 1 முதல் 10,000 வரையிலான படைவீரர்களைக் கோண்டிருக்க வேண்டுமென்பதை ஜாட்டுகள் தீர்மானித்தனர்.

ஆ) ஷெர்ஷாவின் நாணயமுறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது.

இ) முகலாயருக்கும் ராணா பிரதாப் சிங்கிற்கும் இடையே நடைபெற்ற ஹால்டிகாட்டி போர் மிகக் கடுமையான இறுதிப் போர் ஆகும்.

ஈ) சீக்கியப் புனித நூலான "குரு கிரந்த சாகிப்" குரு அர்ஜுன் தேவால் தொகுக்கப்பட்டது.

15. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

i) ரானா சங்காவின் மூர்க்கமான வலிமை வாய்ந்த படைகள் பாபரின் சக்திவாய்ந்த படையை எதிர்கொண்டது.

ii) கன்னோசிப் போருக்குப்பின் அக்பர் நாடு இல்லாத ஒரு இளவரசர் ஆனார்.

அ) (i) சரி

ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) தவறு

ஈ) (i) மற்றும் (ii) சரியானவை

16. பின்வருவனவற்றில் சரியான கூற்றினைக் கண்டுபிடி.

i) ஷெர்ஷா மேற்கில் உள்ள சிந்து முதல் வங்காளத்தில் உள்ள சோனர்கான் வரையிலான கிராண்ட் டிரங்க் சாலையை சீர்படுத்தினார்.

ii) அக்பர் தனது மிகப் பெரிய படையெடுப்புகளின் மூலமாக மாபெரும் பேரரசிற்கு அடித்தளம் இட்டார்.

அ) i) சரி

ஆ) ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரியானவை

ஈ) (i) மற்றும் (ii) தவறானவை.

17. கூற்று: பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.

காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் சரி

இ) கூற்று தவறு; காரணமும் தவறு

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

18. கூற்று: ஔரங்கசீப்பின் ஆட்சியின் இறுதியில் முகலாயப் பேரரசின் அழிவு ஆரம்பமாயிற்று.

காரணம்: ஔரங்கசீப் தக்காண அரசர்களிடம் நட்புறவாக இருந்தார்.

அ) கூற்று சரி; காரனம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

இ) கூற்றும் தவறு; காரணம் சரி

ஈ) கூற்று சரி, காரணம் தவறு

19. கீழ்க்கண்டவற்றுள் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது.

அ) பாஸ்கராச்சார்யா – நீதிநெறி விளக்கம்

ஆ) ஆமுக்தமால்யதா – கிருஷ்ண தேவராயர்

இ) ஜகன்னாத பண்டிதர் – ரசகங்காதரா

ஈ) அல்லசானிபெத்தண்ணா – மனுசரித்திரா

20. பொருத்துக.

| | |
|---|---|
| i) அபுல் பாசல் | 1. ஔரங்கசீப் |
| ii) ஜும்மா மசூதி | 2. அக்பர் |
| iii) பாதுஷாஹி மசூதி | 3. ஷெர்ஷா |
| iv) புராண கிலா | 4. ஷாஜகான் |

அ) 2, 4, 1, 3

ஆ) 3, 2, 1, 4

இ) 3, 1, 4, 2

ஈ) 1, 3, 2, 4

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. இ) பீரங்கிப் படை 2. அ) ஆப்கானியர்களுக்கு 3. இ) ஷெர்கான் 4. அ) ஜாகீர்தாரி 5. இ) ஷெர்ஷா 6. அ) குரு அர்ஜுன் தேவ் 7. ஈ) ஔரங்கசீப் 8. அ) அக்பர் 9. ஆ) குவாலியரை 10. இ) ஷாஜகான் 11. அ) தஜிகநிலகந்தி 12. ஆ) குமரகுருபரர் 13. இ) மோதி மசூதி முழுவதும் பளிங்குக் கல்லால் கட்டப்பட்டது 14. ஆ) ஷெர்ஷாவின் நாணயமுறை, ஆங்கிலேயரின் நாணய முறைக்கு அடித்தளமிட்டது. 15. இ) (i) மற்றும் (ii) தவறு 16. இ) (i) மற்றும் (ii) சரியானவை 17. அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

winmeen.com

18. அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல 19. அ) பாஸ்கராச்சார்யா – நீதிநெறி விளக்கம் 20. அ) 2, 4, 1, 3

## [15] மராத்தியர்

"(மராத்திய நாட்டில்) மத எழுச்சி என்பது பிராமணச் சமயம் சார்ந்ததாக இல்லை. அமைப்புகள், சடங்குகள், வகுப்பு வேறுபாடுகள் ஆகியவற்றுக்கு எதிரான தனது போராட்டத்தைப் பொறுத்த அளவில் வழக்கத்தில் உள்ள கொள்கைக்கு மாறானதாக அது அமைந்தது. துறவிகள் பெரும்பாலும் பிராமண வகுப்பைச் சாராமல் சமூகத்தின் அடிநிலையைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்" – நீதிபதி ரானடே

பேஷ்வா என்ற பாரசீக சொல்லின் பொருள் "முதன்மையான" அல்லது "பிரதம அமைச்சர்" என்பதாகும்.

**ராஜா தேசிங்கு:** மராத்திய அரசர் ராஜாராம் முகலாயப் படைகளின் அச்சுறுத்தல் காரணமாக ராய்கரிலிருந்து தப்பியோடி செஞ்சியில் அடைக்கலம் புகுந்தார். படைத்தளபதி சுல்பிகர்கான் தலைமையிலும், பின்னர் தாவுத்கான் தலைமையிலும் அவரைத் தொடர்ந்து சென்ற முகலாயப் படைகள் செஞ்சியைக் கைப்பற்றின. செஞ்சிக்கு எதிரான முகலாயத் தாக்குதலில் பன்டேலா ரஜபுத்திர தலைவர் சுவரூப் சிங் செஞ்சிக்கோட்டையின் (கோட்டை இராணுவத்தின் தலைவர்) கிலாதாராக 1700இல் பணியில் அமர்த்தப்பட்டார். அதன் பிறகு சுவரூப் சிங் செஞ்சி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். 1714இல் அவர் மறைந்த பிறகு அவரது மகன் தேஜ் சிங் (தேசிங்கு) செஞ்சியின் ஆளுநராக பொறுப்பேற்றார். முகலாய மன்னருக்குக் கப்பம் கட்டமறுத்ததை அடுத்து நவாப் சதத்–உல்–லா கானின் கோபத்திற்கு ஆளானார். அதனைத் தொடர்ந்து நடந்த சண்டையில் 22 வயதே ஆன ராஜா தேசிங்கு கொல்லப்பட்டார். அவரது இள வயது மனைவி உடன்கட்டை ஏறினார். ராஜா தேசிங்கு நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதைப் பாடல்களாக உருவெடுத்தது.

சரஸ்வதி மஹால் நூலகம் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டு இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது. மராத்திய அரசவையின் அன்றாட அலுவல்கள், 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு–மராத்தியர் இடையே நடந்த கடிதப்போக்குவரத்து ஆகியன மோடி எழுத்துவடிவ ஆவணங்களாக அமைந்துள்ளன. மராத்தி மொழியில் அமைந்த ஆவணங்கள் மோடி எழுத்து வடிவில் எழுதப்பட்டன.

ஆளுநர் மன்றோவின் கல்விக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட 1823ஆம் ஆண்டின் அறிக்கைப்படி தஞ்சாவூர் முழுவதும் இருந்த 44 பள்ளிகளில் அரசவை மூலமாக 21 இலவச பள்ளிகள் நடத்தப்பட்டன. சமயப் பரப்பாளர்கள் 19 பள்ளிகளையும், ஆலய நிர்வாகம் ஒரு பள்ளியையும் நடத்தின. ஆசிரியர்கள் தாங்களாகவே இலவசமாக மூன்று பள்ளிகளை நடத்தினார்கள். மிக முக்கியமான புனிதத்தல வழித்தடங்களில் அமைந்திருந்த பதிமூன்று சத்திரங்கள் மூலமாக யாத்ரிகர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவும் உறைவிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. வலிமைமிக்க கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றியோர் _____________

அ) மராத்தியர்

ஆ) முகலாயர்

இ) ஆங்கிலேயர்

ஈ) நாயக்கர்

2. புரந்தர் உடன்படிக்கை, சிவாஜிக்கும் ___________க்கும் இடையே கையெழுத்தானது.

அ) அஃப்சல்கான்

ஆ) செயிஷ்டகான்

இ) ஜெய்சிங்

ஈ) ஔரங்கசீப்

3. சிவாஜியின் ஆலோசனை சபை ________________ என்று அழைக்கப்பட்டது.

அ) அஷ்டபிரதானம்

ஆ) அஷ்டதிக்கஜங்கள்

இ) நவரத்தினங்கள்

ஈ) பஞ்சபாண்டவர்கள்

4. சிவாஜியின் இராணுவ அமைப்பில் மிகச்சிறிய படை அலகின் தலைவராக ______________ இருந்தார்.

அ) நாயக்

ஆ) ஹவில்தார்

இ) பர்கிர்

ஈ) ஷைலேதார்

5. மராத்திய சாம்ராஜ்யத்தின் அதிகாரத்தை மேம்படுத்திய பேஷ்வா _____________ ஆவார்.

அ) முதலாம் பாஜி ராவ்

ஆ) பாலாஜி விஷ்வநாத்

இ) பாலாஜி பாஜி ராவ்

ஈ) இரண்டாம் பாஜி ராவ்

6. _____________ கோகினூர் வைரத்தை எடுத்துச் சென்றார்.

அ) அஹமது ஷா அப்தலி

ஆ) நாதிர் ஷா

இ) ஷுஜா–உத்–தௌலா

ஈ) நஜீப்–உத்–தௌலா

7. _____________ உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ–மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அ) மதராஸ் உடன்படிக்கை

ஆ) பூனா உடன்படிக்கை

இ) சால்பை உடன்படிக்கை

ஈ) பேசின் உடன்படிக்கை

8. இரண்டாவது ஆங்கிலோ–மராத்தியப் போரின்போது ஆங்கிலேய கவர்னர்– ஜெனரலாக இருந்தவர் ____________

அ) காரன்வாலிஸ் பிரபு

ஆ) வெல்லேஸ்லி பிரபு

இ) ஹேஸ்டிங்க்ஸ் பிரபு

ஈ) டல்ஹௌசி பிரபு

9. கிராம அளவில் வருவாய் வசூலை மத்திய அரசுக்கு அனுப்பும் பொறுப்பை ______________ ஏற்றிருந்தனர்.

அ) தேஷ்முக்கு

ஆ) குல்கர்னி

இ) கொத்வால்

ஈ) பட்டேல்

10. மனிதர்களுக்காகவும் மற்றும் விலங்குகளுக்காகவும் மூலிகை மருந்துகளைத் தயாரிக்க ____________ இரண்டாம் சரபோஜியால் நிறுவப்பட்டது.

அ) சரஸ்வதி மஹால்

ஆ) முக்தாம்பாள் சத்திரம்

இ) நவ வித்யா

ஈ) தன்வந்திரி மஹால்

11. கீழ்க்கண்டவற்றுள் இரண்டாம் சரபோஜி எழுதாத புத்தகம் என்ன?

அ) குமாரசம்பவ சம்பு

ஆ) தேவேந்திர குறவஞ்சி

இ) முத்ரராஷ்ஸ்சாய

ஈ) குமாரசம்பவம்

12. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) சிவாஜியை அடக்கும் முக்கிய நோக்கில் 1660ஆம் ஆண்டு அஃப்சல்கான் தக்காணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

ஆ) சிவாஜியின் வழித்தோன்றல்களைப் பாதுகாப்பதில் செஞ்சி முன்னணியில் செயல்பட்டது.

இ) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்திச் செய்பவர்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

ஈ) சர்தேஷ்முகி என்பது சிவாஜி வசூலித்த 15 சதவிகித கூடுதல் வருவாயாகும்.

13. கீழ்க்கண்டவற்றுள் சரியான தேர்ந்தெடு.

winmeen.com

அ) ஆங்கிலேயர்கள் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமம் பெற்றனர்.

ஆ) 1749 இல் ஆற்காட்டு நவாப் தோஸ்து அலியை சாஹு தோற்கடித்துக் கொன்றார்.

இ) பேஷ்வாக்களின் கீழ் நீதிமுறை முழுமை பெற்றிருந்தது.

ஈ) தஞ்சை மராத்திய அரசின் போன்ஸலே வம்சத்து கடைசி அரசர் வெங்கோஜி ஆவார்.

14. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i) சிவாஜியின் கீழிருந்த நீதி நிர்வாகம் பழமையான ஒன்றாகும்.

ii) நிலையான நீதிமன்றங்களும் விதிமுறைகளும் இருந்தன.

அ) (i) சரி

ஆ) (ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரி

ஈ) (i) மற்றும் (ii) தவறு

15. கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i) வடகிழக்கு எல்லைப்புறப் பகுதியின் பாதுகாப்பை வீழ்ந்துகொண்டிருந்த முகலாயப் பேரரசு நழுவவிட்டது.

ii) இது நாதிர் ஷாவின் படையெடுப்பிற்கு வழிவகுத்தது.

அ) i) சரி

ஆ) ii) சரி

இ) (i) மற்றும் (ii) சரியானவை

ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

16. **கூற்று:** மூன்றாம் பானிப்பட் போர் ஆங்கிலேயரின் அதிகார எழுச்சிக்கு வழிவகுத்தது.

**காரணம்:** இத்தோல்வி மராத்தியருக்கும் முகலாயருக்கும் ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று சரி; காரணம் தவறு

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

17. **கூற்று:** காலாட்படை வீரர்கள் மஹாராஷ்டிராவிலிருந்து மட்டும் தேர்வு செய்யப்பட்டனர்.

**காரணம்:** மராத்தியர் குதிரைப்படையில் பணியாற்ற விரும்பினர்.

அ) கூற்று தவறு; காரணம் சரி

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றினை விளக்குகிறது.

இ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

ஈ) கூற்று மற்றும் காரணம் சரியானவை

18. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருத்தப்படவில்லை

அ) சிவாஜி – மலை எலி

ஆ) முதலாம் பாஜி ராவ் – உத்கிர் போர்

இ) தைமுர் ஷா – லாகூரின் வைஸ்ராய்

ஈ) தேசிங்கு – செஞ்சி

19. பொருத்துக.

i) அமத்யா 1. அரசரின் நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்கள்

ii) சுமந்த் 2. பொது ஒழுக்க நடைமுறைகள்

iii) பண்டிட் ராவ் 3. போர் மற்றும் அமைதி

iv) வாக்கிய நாவிஸ் 4. அரசின் அனைத்து பொது கணக்குகள்

அ) 4, 1, 2, 3

ஆ) 1, 2, 4, 3

இ) 4, 3, 2, 1

ஈ) 1, 4, 2, 3

20. சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு வந்தவர்களைக் கால வரிசைப்படி எழுதவும்.

அ) சாம்பாஜி, சாஹு, ராஜாராம், இரண்டாம் சாம்பாஜி

ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

இ) ராஜாராம், சாம்பாஜி, சாஹு, இரண்டாம் சாம்பாஜி

ஈ) சாம்பாஜி, இரண்டாம் சாம்பாஜி, ராஜாராம், சாஹு

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. அ) மராத்தியர் 2. இ) ஜெய்சிங் 3. அ) அஷ்டபிரதானம் 4. அ) நாயக் 5. அ) முதலாம் பாஜி ராவ் 6. ஆ) நாதிர் ஷா 7. இ) சால்பை உடன்படிக்கை 8. ஆ) வெல்லெஸ்லி பிரபு 9. ஈ) பட்டேல் 10. ஈ) தன்வந்திரி மஹால் 11. ஈ) குமாரசம்பவர் 12. இ) சிவாஜியின் வருவாய் நிர்வாகம், மனிதாபிமானம் சார்ந்து, உற்பத்திச் செய்பவர்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது. 13. அ) ஆங்கிலேயர்கள் மராத்தியருடன் நட்புறவு கொண்டு தக்காணத்தில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமம் பெற்றனர். 14. அ) (i) சரி 15. இ) (i) மற்றும் (ii) சரியானவை 16. அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 17. அ) கூற்று தவறு; காரணம் சரி18. ஆ) முதலாம் பாஜி ராவ்– உத்கிர் போர் 19. இ) 4,3,2,1 20. ஆ) சாம்பாஜி, ராஜாராம், சாஹு, இரண்டாம் சாம்பாஜி

## [16] ஐரோப்பியரின் வருகை

கர்நாடகம் என்பது உண்மையில் கன்னடமொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதியைக் குறிப்பதாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் இது மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் கிழக்குத்தொடர்ச்சி மலைகளுக்கும்

winmeen.com

இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள இன்றைய இந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகா, தெற்கு ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இப்பகுதிகளை ஆற்காட்டு நவாப் கட்டுப்படுத்தினார்.

1623இல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழியர்கள் , போர்த்துகீசியர் ஜப்பானியர் அடங்கிய இருபது பேர்களை டச்சு கிழக்கிந்தியக் கம்பெனியின் முகவர்கள் இந்தோனேசியாவிலுள்ள அம்பாய்னா என்னும் தீவில் சித்திரவதை செய்து கொன்றனர். இது அம்பாய்னா படுகொலை என்றழைக்கப்படுகிறது.

லெய்டன் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வாளரான வில் ஓ டிஜிக் (Wil O Dijk) என்பார் ஒரு ஆய்வுக்கட்டுரையில் , இங்கிருந்தும் வங்காளவிரிகுடாப் பகுதிகளிலிருந்தும் டச்சுக் கப்பல்களில் ஏற்றி அனுப்பப்பட்ட அடிமைப் பயணிகளின் பட்டியலைக் குறிப்பிட்டுள்ளார். 1621 ஜுன் முதல் 1665 நவம்பர் வரை மொத்தம் 26,885 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அடிமைகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 1379 நபர்கள் உயிரிழந்தனர். விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் தஞ்சாவூர், மதுரை, செஞ்சி நாயக்க அரசுகளால் உருவான பஞ்சம் போன்ற காரணங்களால் சோழமண்டலத்தில் அடிமை ஏற்றுமதி பெருகியது என அவ்வாய்வாளர் மேலும் குறிப்பிடுகின்றார்.

இக்காலத்தில் நிறுவனம் (factory) என்பது அயல்நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடம் என்னும் பொருளைப் பெற்றது.

"நாங்கள் கடந்து சென்ற கிராமப்புறபகுதி (புதுச்சேரிக்கு வெளியேயுள்ள பகுதி) மிக நன்றாக விவசாயம் செய்யப்பட்டிருந்தது. மிக அழகாகவும் இருந்தது. அரிசி ஏராளமாகக் காணப்பட்டது. எங்கே நீர் இருந்ததோ அங்கே பருத்தி விளைவிக்கப்பட்டது." புதுச்சேரி நிலப்பரப்பை குறித்து பிரான்ஸிஸ் மார்ட்டின் தனது நாட்குறிப்பில் எழுதியது.

**உங்களுக்குத் தெரியுமா?**

உடன்கட்டை (சதி) ஏறும் பழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

**நாரிஸ் தூதுக்குழு**

இங்கிலாந்து அரசர் மூன்றாம் வில்லியம் சர் வில்லியம் நாரிஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். அவர் 1698இல் ஔரங்கசீப்பை சந்தித்தார். ஆங்கிலேயக் குடியேற்றங்கள் மீது ஆங்கிலேயரின் முழுமையான கட்டுப்பாட்டைப் பெறுவதும், ஏற்கனவே பெறப்பட்ட சிறப்பு உரிமைகளை உறுதிப்படுத்துவதும், வணிக உரிமைகளை மேலும் நீட்டிப்பதும் இச்சந்திப்பின் நோக்கங்களாக இருந்தன. ஆனால் இவ்வேண்டுகோள் 1714 – 1717 ஆண்டுகளில் சுர்மன் என்பவரின் தலைமையின் கீழ்வந்த தூதுக்குழு முகலாயப் பேரரசர் பருக்சியாரைச் சந்தித்தபோதுதான் ஏற்கப்பட்டது. சுர்மன் வணிக உரிமைகள் தொடர்பான அரசரின் ஆணையை பருக்சியாரிடமிருந்து பெற்றார். இவ்வாணை குஜராத், ஹைதராபாத், வங்காளம் ஆகிய பகுதிகளின் உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

**ஆனந்தரங்க பிள்ளை நாட்குறிப்புகள்:**

ஆனந்தரங்க பிள்லை (1709 – 1761) அக்காலத்தில் தலைசிறந்த வணிகராக விளங்கிய திருவேங்கடம் பிள்லைக்கு மகனாகப் பிறந்தார். தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர் பிரெஞ்சு ஆளுநர்களான டூமாஸ், துய்ப்ளே ஆகியோர் கொடுத்த ஆதரவால் புதுச்சேரியில் மாபெரும் வணிகரானார். துய்ப்ளே இவரை தலைமை துபாஷியாகவும் (துபாஷி – இரு மொழிகள் அறிந்தவர்) தலைமை வணிக முகவராகவும் (1746) அமர்த்தினார். இது அவரை புதுச்சேரியில் பெரும் அரசியல் செல்வாக்குள்ள நபராக மாற்றியது. ஆனால் அவருடைய உண்மையான புகழ், தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கிய அவருடைய நாட்குறிப்புகளைச் சார்ந்துள்ளது. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு,

முக்கியமாக துய்ப்ளே ஆளுநராக இருந்த காலப்பகுதியின் வரலாற்றுக்கு மிகவும் மதிப்புமிக்க சான்றாதாரமாகும். மேலும் அது சமகால நிகழ்வுகள் குறித்த அவருடைய பார்வை மற்றும் கருத்துக்களின் பதிவுமாகும்.

**ஆம்பூர் போர் (1749)**

ஹைதராபாத் நிஜாமிற்கு உரிமை கோரிய முசாபர் ஜங், கர்நாடக அரியணைக்கு உரிமைகோரிய சந்தா சாகிப் ஆகிய இருவரும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட பிரெஞ்சுக் காலாட்படைகளின் உதவியோடு அன்வாருதீன் படைகளைத் தாக்கி பெருமளவு சேதத்தை ஏற்படுத்தினர். போரில் அன்வாருதீன் கொல்லப்பட்டார். சந்தா சாகிப் நவாபாக ஆற்காட்டினுள் நுழைந்தார். இதே சமயத்தில் அன்வாருதீனின் மகனான முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றார்.

**ராபர்ட் கிளைவ்** 1725 செப்டம்பர் 29இல் பிறந்தார். அவருக்குக் கல்வியில் ஆர்வமில்லை. படிப்பில் ஆர்வமின்மை, ஒழுக்கமின்மையால் மூன்று பள்ளிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். மேலும் சண்டைக்காரன் என்ற அவப்பெயரையும் பெற்றார். அவருடைய நடத்தையால் வெறுப்புக் கொண்ட அவரின் தந்தை அவரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியில் எழுத்தர் பணியில் அமர்த்தி இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். கிளைவ் சென்னை மாகாண ஆளுநராக உருவானார். முதல்முறை ஆளுநராக இருந்தபோது (1755 – 60) பிளாசிப் போரில் வெற்றிபெற்று அதன்மூலம் இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசிற்கு அடித்தளமிட்டார். இரண்டாவது முறை 1764 – 1767 ஆளுநராக இருந்தபோது பக்சார் போரில் வெற்றி பெற்று வங்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமைகொள்ளச் செய்தார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும் போது மிகப் பெரிய செல்வந்தராக வெளியேறினார். அவரின் தனிப்பட்ட சொத்தாக 2,34,000 பவுண்டுகள் இருந்தது. அது தவிர வங்காலத்திலுள்ள அவரது ஜாகிர் மூலம் 27,000 பவுண்டுகள் வருடாந்திர வாடகை வருவாயைப் பெற்றார். அவர் இங்கிலாந்து திரும்பியபோது தன் மீதான ஊழல் குற்றச்சாட்டு குறித்துப் பாராளுமன்ற விசாரணையை எதிர் கொண்டார். கிளைவ் தன் மீதான குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டபோதிலும் தற்கொலை செய்து கொண்டார்.

வங்காள நவாப்பால் கைது செய்யப்பட்ட 146 ஐரோப்பியர் 18க்கு 15அடி அளவுள்ள ஓர் அறையில் அடைக்கப்பட்டதாகவும் அவர்களில் 23 பேர் மட்டுமே உயிர்பிழைக்க மற்றவர்கள் மூச்சுத்திணறி இறந்து போனதாகவும் பழி சொல்லப்பட்டது. இருட்டறைத் துயரம் (Black Hol Tragedy) என ஆங்கிலேய ஆவணங்களில் சுட்டும் இந்நிகழ்வின் உண்மைத் தன்மை குறித்து வரலாற்று அறிஞர்களிடையே விவாதம் நடைபெறுகிறது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. இந்தியாவில் போர்த்துகீசியரின் அரசியல் தலைமையிடம் ____________ ஆகும்.

அ) கோவா

ஆ) டையூ

இ) டாமன்

ஈ) சூரத்

2. மேற்கு ஆசியாவிற்கும் ஐரோப்பிற்கும் நுழைவாயிலாக இருந்த துறைமுகம் _________ ஆகும்.

அ) டையூ

ஆ) கல்கத்தா

இ) பம்பாய்

ஈ) சூரத்

3. ஆங்கிலேயர் 1639ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில் __________கோட்டையைக் கட்டினார்.

அ) புனித ஜார்ஜ் கோட்டை

ஆ) வில்லியம் கோட்டை

இ) வேலூர் கோட்டை

ஈ) கோல்கொண்டா கோட்டை

4. நீலநீர்க் கொள்கையுடன் தொடர்புடையவர் ______________

அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா

ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்

இ) நீனோ டா குன்கா

ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

5. _____________ "தமிழ் அச்சுப்பதிப்பின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

அ) இராபர்டோ டி நொபிலி

ஆ) அல்போன்சோ டி அல்புகர்க்

இ) ஹென்ரிக்ஸ்

ஈ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா

6. அம்பாய்னா படுகொலைக்குக் காரணமானவர்கள் ____________

அ) ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி

ஆ) டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி

இ) போர்த்துகீசு கிழக்கிந்தியக் கம்பெனி

ஈ) பிரெஞ்சு கிழக்கு இந்தியக் கம்பெனி

7. பிரான்சிஸ் மார்ட்டின் என்பவர் ___________ பிரெஞ்சுக் குடியேற்றங்களின் கேந்திர மையமாக ஆக்கினார்.

அ) மசூலிப்பட்டினம்

ஆ) நாகப்பட்டினம்

இ) கோவா

ஈ) புதுச்சேரி

8. இரண்டாம் சார்லஸ் வரதட்சணையாகப் பெற்ற ____________ ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

அ) மதராஸ்

ஆ) கல்கத்தா

இ) பம்பாய்

ஈ) தில்லி

9. முதலாம் கர்நாடகப் போரின்போது __________ புதுச்சேரியின் ஆளுநராக இருந்தார்.

அ) பீட்டன்

ஆ) லா போர்டோனாய்ஸ்

இ) துய்ப்ளே

ஈ) மோர்ஸ்

10. ராபர்ட் கிளைவ் _____________இல் வெற்றிபெற்று வங்காளத்தில் ஆங்கிலேயர் ஆட்சியை வலிமை பெறச் செய்தார்.

அ) கர்நாடகப் போர்கள்

ஆ) ஏழாண்டுப் போர்

இ) பக்சார் போர்

ஈ) பிளாசிப் போர்

11. வந்தவாசிப் போர் _____________க்கிடையே நடைபெற்றது.

அ) அயர்கூட் மற்றும் லாலி

ஆ) ராபர்ட் கிளைவ் மற்றும் லாலி

இ) அயர்கூட் மற்றும் புஸ்ஸி

ஈ) ராபர்ட் கிளைவ் மற்றும் புஸ்ஸி

12. ஏழாண்டுப் போர் ____________யுடன் முடிவுக்கு வந்தது.

அ) புதுச்சேரி உடன்படிக்கை

ஆ) அலகாபாத் உடன்படிக்கை

இ) பாரிஸ் உடன்படிக்கை

ஈ) ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை

13. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும், பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர்.

ஆ) டச்சுக்காரர் ஆங்கிலேயரைத் தொடர்ந்து பம்பாய்க்கு வந்தனர்.

இ) தஞ்சாவூர் முகலாயரால் ஆளப்படும் அரசாக இருந்தது.

ஈ) பம்பாய் முக்கியமான வணிகமையமாக இருந்து, சூரத்திலிருந்தும் ஒரிசாவிலிருந்தும் வணிகர்களை ஈர்த்தது.

14. கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) இந்திய அரசர்கள் அயல்நாட்டவரிடம் கொண்டிருந்த ஈர்ப்பினை ஐரோப்பியர் சாதகமாக்கிக் கொண்டனர்.

ஆ) நறுமணத்தீவுகளில் டச்சுக்காரர் வெற்றி பெற்றனர்.

இ) கோல்பெர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டதற்கு காரணமாக இருந்தார்.

ஈ) புதுச்சேரியில் இன்றளவும் பிரெஞ்சுத் தாக்கத்தைக் காணமுடிகிறது.

15. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i) பிளாசிப் போர், வணிக நிறுவனமாக இருந்த ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை, வங்காளத்தின் மீது இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக மாற்றியது.

ii) பெரும் நிலப்பரப்பை ஆட்சிசெய்த இங்கிலாந்து வந்தவாசிப் போருக்குப்பின், வணிக நிறுவனத்தை ஆளுகின்ற சக்தியாக எழுச்சி பெற்றது.

அ) i) சரி

ஆ) ii) சரி

இ) இரண்டும் சரி

ஈ) இரண்டும் தவறு

16. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i) அல்புகர்க் இந்தியாவில் போர்த்துகீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் ஆவார்.

ii) உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

அ) i) சரி

ஆ) ii) தவறு

இ) இரண்டும் சரி

ஈ) இரண்டும் தவறு

17. **கூற்று:** பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் இந்தியாவிற்கு வருகை தந்தனர்.

**காரணம்:** அவர்களது உண்மையான நோக்கம் ஐரோப்பியச் சந்தைக்குத் தேவையான மிளகு, இலவங்கம், கிராம்பு ஏனைய நறுமணப் பொருட்களை கொள்முதல் செய்வதாகும்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று சரி; காரணம் தவறு

இ) கூற்று தவறு; காரணம் சரி

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

18. **கூற்று:** இந்தியா பொருள் உற்பத்திக்கான வலுவான தளத்தையும், குறிப்பாகப் பருத்தியிழைத் துணிகளுக்காகவும் புகழ்பெற்றிருந்தது.

**காரணம்:** நாட்டின் முதல் முக்கியமான பொருளாதார நடவடிக்கை விவசாயம் ஆகும்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

19. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

அ) தரங்கம்பாடி – டேனியர்

ஆ) சர் தாமஸ் ரோ – பிரெஞ்சுக்காரர்

இ) அன்வாருதீன் – ஆற்காடு நவாப்

ஈ) அல்புகர்க் – போர்த்துகீசியர்

20. பொருத்துக.

i) சாமுத்ரி (சாமரின்) –1. அச்சுப் பதிப்பு

ii) ஹென்ரிக்ஸ் – 2. ஹைதராபாத் நிஜாம்

iii) முசாபர் ஜங் – 3. சந்தா சாகிப்

iv) ஆற்காட்டு நவாப் – 4. கள்ளிக்கோட்டை அரசர்

அ) 4, 1, 2, 3

ஆ) 4, 3, 2, 1

இ) 3, 2, 1, 4

ஈ) 2, 1, 4, 3

**I. சரியான விடையைத் தேர்வு செய்க**

**விடைகள்**

1. அ) கோவா 2. ஈ) சூரத் 3. அ) புனித ஜார்ஜ் கோட்டை 4. அ) பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா 5. இ) ஹென்ரிக்ஸ் 6. ஆ) டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி 7. ஈ) புதுச்சேரி 8. இ) பம்பாய் 9. இ) துய்ப்ளே 10. இ) பக்சார் போர் 11. அ) அயர்கூட் மற்றும் லாலி 12. இ) பாரிஸ் உடன்படிக்கை 13. அ) முகலாயப் பேரரசின் வலிமை குறித்தும், பொருளாதார வளம் பற்றியும் ஐரோப்பியர் நன்கு அறிந்திருந்தனர். 14. அ) இந்திய அரசர்கள் அயல்நாட்டவரிடம் கொண்டிருந்த ஈர்ப்பினை ஐரோப்பியர் சாதகமாக்கிக் கொண்டனர். 15. இ) இரண்டும் சரி 16. இ) இரண்டும் சரி 17. அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 18. இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 19. ஆ) சர் தாமஸ் ரோ– பிரெஞ்சுக்காரர் 20. அ) 4, 1, 2, 3

## [17] ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவுகள்

1772 வரை கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத் தலைவர் ஆளுநரே ஆவார் (வில்லியம் கோட்டையிலோ ஜார்ஜ் கோட்டையிலோ வீற்றிருப்பார்). வில்லியம் கோட்டையில் ஆளுநராகப் பதவியிலிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழுங்கு முறைச் சட்டத்தின் (1773) மூலமாக கவர்னர் ஜெனரலாகப்

பதவி உயர்த்தப்பட்டார். கவர்னர் ஜெனரல் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் மன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். 1833 பட்டயச் சட்டம் மூலமாக அப்பதவி இந்தியாவின் கவர்னர் ஜெனரல் என்று நிலையேற்றம் பெற்றது. அப்பதவியும் இயக்குநர் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, பதவி வகிப்பவர் இயக்குநர் மன்றத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டிய கடமையுமிருந்தது. 1857 பெருங்கிளர்ச்சிக்குப்பின் இந்திய அரசின் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து இங்கிலாந்து அரசு நேரடியாக எடுத்துக்கொள்ள வகைசெய்த 1858இன் 'விக்டோரியா ராணியாரின் பிரகடனம்' முதன்முறையாக அரசப் பிரதிநிதி (வைஸ்ராய் மற்றும் கவர்னர் ஜெனரல்) என்ற சொற்றொடரைக் கையாண்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்குக் கட்டுப்பட்ட முதல் வைஸ்ராய் மற்றும் இந்திய கவர்னர் ஜெனரல் கானிங் நியமிக்கப்பட்டார்.

வில்லியம் பெண்டிங் பிரபு காலத்தில் (1833) மகல்வாரிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி நிலவருவாய்க்கான ஒப்பந்தம் நிலத்தின் உரிமையாளரோடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நிலவரியானது பயிர் சாகுபடி செய்பவரிடமிருந்தே வசூலிக்கப்பட்டது.

**தாமஸ் மன்றோ:** தாமஸ் மன்றோ 1780 இல் மதராஸ் வந்தடைந்தார். முதல் பன்னிரெண்டு வருடங்கள் அவர் ஒரு படை வீரராக மைசூர் போரில் பங்கேற்றார். அவர் பாரமஹால் பகுதியில் (சேலம் மாவட்டம்) 1792 முதல் 1799 வரையிலும், கனரா பகுதியில் 1799 முதல் 1800 வரையிலும் பணியிலிருந்தார். பிரித்தெடுக்கப்பட்ட மாவட்டங்களான கடப்பா, கர்னூல், சித்தூர், அனந்தபூர் ஆகியவற்றிற்கு ஆட்சியராக பணிபுரிந்தார். இக்காலத்தில்தான் அவர் இரயத்துவாரி முறை பற்றி யோசிக்கலானார். அவர் 1820 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்று அதன் பின் ஏழு வருடங்கள் சேவையாற்றினார். அப்போது 1822 ஆம் ஆண்டில் இரயத்துவாரி முறையை செம்மையாக அறிமுகப்படுத்தி செயலூட்டினார். அவர் ஆளுநராக இருந்த காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததோடு கல்விக்கான செலவீனங்களை எதிர்காலத்திற்கான முதலீடாகவே கருதினார். அவர் நிர்வாகத்தில் இந்தியர்கள் பெருமளவில் பங்காற்றுவதை ஆதரித்தார். அவர் ஜூலை 1827ஆம் ஆண்டு கர்னூலில் அமைந்துள்ள பட்டிக்கொண்டாவில் காலரா நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். மக்களிடையே பிரபலமாகியிருந்த ஆளுநரான அவரின் நினைவாக பல நினைவிடங்கள் எழுப்பப்பட்டதோடு , குழந்தைகள் பலருக்கும் அவரது பெயர் சூட்டப்பட்டது. பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து அவரது சிலை வடிவமைக்கப்பட்டு 1839ஆம் ஆண்டு சென்னையில் நிறுவப்பட்டது.

மாகாணம் (Presidency) என்பதற்கும் மாநிலம் (Province) என்பதற்குமான வேறுபாடு: கிழக்கிந்தியக் கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்றிருக்கும் இடம் மாகாணம் ஆகும். அவ்விதத்தில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும். பின்னர் இம்மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம் போன்றவை உருவாக்கப்பட்டன.

பட்டயம் (charter) என்பது ஒரு நாட்டின் இறையாண்மை அதிகாரத்தை மையமாகக்கொண்டு சகல அதிகாரங்களும், சலுகைகளும் உள்ள ஒரு வணிக நிறுவனத்தையோ, பல்கலைக்கழகத்தையோ, நகரத்தையோ உருவாக்க வழங்கப்படும் சட்டமாகும். கிழக்கிந்தியக் கம்பெனி, மகாராணி எலிசபெத் 1600இல் வழங்கிய பட்டயத்தின் மூலம் துவங்கப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக 1773ஆம் ஆண்டு பதவியேற்றது முதல் இருபது ஆண்டுகளுக்கு ஒருமுறை இப்பட்டயம் புதுப்பிக்கப்பட்ட வேண்டியது அவசியமானது. பிரிட்டிஷ் முடியாட்சியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இந்தியா வருவதற்கு முன்பு வழங்கப்பட்ட 1853ஆம் ஆண்டின் பட்டயச்சட்டமே கடைசியானது ஆகும்.

**மெக்காலே:** இந்திய இலக்கியம், தத்துவம், மருத்துவம் இவற்றில் எதிலும் மெக்காலே நல்லவற்றை காணவில்லை. 1835ஆம் ஆண்டு அவர் எழுதிய கல்வி குறித்த குறிப்பில் மெக்காலே கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

…..எனக்கு அரபு மொழியும் தெரியாது, சமஸ்கிருதமும் தெரியாது. ஆனால் அரபு, சமஸ்கிருத மொழிகளில் சிறப்பானவையாகக் கருதப்படும் நூல்களின் மொழியாக்கங்களைப் படித்திருக்கிறேன். எனது நாட்டிலும், இங்கும் (இந்தியாவில்) கிழக்கத்திய மொழிகளில் புலமை பெற்ற மனிதர்களுடன் உறவாடியிருக்கின்றேன். நல்லதோர் ஐரோப்பிய நூலகத்தில் உள்ள ஓர் அலமாரியில் இருக்கும் நூல்கள் அரேபியாவிலும், இந்தியாவிலும் உள்ள அனைத்து இலக்கிய நூல்களுக்கும் சமம் என்பதை அவர்களுள் ஒருவர்கூட மறுக்கமாட்டார்கள்.

……தற்போது நமக்கும், நாம் ஆள்கின்ற லட்சக்கணக்கான மக்களுக்குமிடையே உரைபெயர்ப்பாளர்களாக ஒரு வர்க்கத்தை உருவாக்க நாம் முடிந்ததைச் செய்ய வேண்டும் – இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர் ஆனால் சுவையில், கருத்தில், தார்மீகத்தில், அறிவியல் ஆங்கிலேயராக இருக்கும் ஒரு வர்க்கம்.

……பிராந்திய மொழிகளைச் சீர்திருத்தி, மேற்கத்திய சொற்பட்டியலிலிருந்து அறிவியல் தொடர்பான சொற்களைச் சேர்த்து செழுமைப்படுத்தி அனைத்து மக்களுக்கும் எவ்வழியில் அறிவைக் கொண்டு சேர்க்க முடியுமோ அவ்வழியில் கொண்டு சேர்க்கும் பொறுப்பை அவ்வர்க்கத்திடமே விட்டுவிடலாம்.

பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே இருப்புப்பாதை 1853ஆம் ஆண்டு அமையவும், ஹௌராவுக்கும் ராணிகஞ்சிற்கும் இடையே 1854 – 55ஆம் ஆண்டுகளில் அமையவும் செய்தது. தென்னிந்தியாவில் முதல் இருப்புப்பாதை 1856ஆம் ஆண்டு மதராஸுக்கும், அரக்கோணத்திற்கும் இடையே அமைக்கப்பட்டது. அவ்வாண்டில் திறந்து வைக்கப்பட்ட ரயில் நிலையங்களில் ராயபுரம் ரயில் நிலையமும் ஒன்றாகும்.

இங்கிலாந்து மக்களவையின் தேர்வுக்குழு (Select Committee) 1840 ஆம் ஆண்டு அங்கம் வகித்த சார்லஸ் ட்ராவல்யன் இவ்வாறு தன் பார்வையை முன் வைக்கிறார். வங்காளத்தில் முன்பு விளைந்த ஒருவகைப் பட்டு போன்ற பருத்தியிலிருந்து டாக்கா மஸ்லின் என்ற மெல்லிய துணியை நெய்வார்கள். அது போன்ற ஒன்றை பார்ப்பது அரிதாகிவிட்டது. டாக்கா நகரின் மக்கள் தொகை 1,50,000லிருந்து 30,000 அல்லது 40,000 என்ற அளவில் விழுந்து விட்டது என்பதோடு அந்நகரை மலேரியா நோயும், காடுகளும் வேகமாக சூழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மான்செஸ்டர் என்று கருதப்பட்டு வந்த நகரம் இன்று சிறப்பிழந்து வறுமை சூழ்ந்து சிறுத்துவிட்டது. அங்கே நிலவும் அசாதாரணச் சூழல் உண்மையில் படு பயங்கரமானது.

அபே டுபாய் என்ற பிரெஞ்சுக் கத்தோலிக்க சமயப் போதகர் தன் ஐரோப்பியாவிற்குத் திரும்புவதற்கு முன் 1823ஆம் ஆண்டு இவ்வாறு கூறுகிறார். "கவலையும், இறப்பும் எங்கெங்கும் நிறைந்து சென்னை மாகாணத்திலுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் பசியால் செத்து மடிகிறார்கள்".

"வணிக வரலாற்றில் இதற்கு சமமான ஒரு துயரம் நிகழ்ந்ததில்லை. பருத்தி நெசவாளர்களின் எலும்பு இந்தியாவின் கங்கைச் சமவெளிப் பரப்புகளை வெளுக்கச் செய்கின்றன" என்று கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் கூறுகிறார்.

அன்றைய சென்னை மாகாணத்தின் குண்டூர் மாவட்டத்தில் 1833ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் பற்றிய ஒரு நேரடிப் பார்வையாளரின் (ஆங்கிலேயர்) கூற்றுவருமாறு: மிகுந்த நெருக்கடியான சூழலில் மனிதர்கள் எத்தகைய அருவருப்பான உணவை உட்கொள்வார்கள் என்பதை யோசிக்கவே மிகவும் அச்சமாக உள்ளது. ஏனென்றால் உயிர் பிழைத்த சிலர் ஒரு செத்த நாயையும் குதிரையையும் பேராசையோடு

சுவைப்பதைக் கண்டேன். மற்றொரு சமயம் ஒரு துரதிருஷ்டமான கழுதை கோட்டையை விட்டு வெளியேறிய அக்கணத்திலேயே அதன் மீது ஓநாய்கள் போல் பாய்ந்து முன்னங்கால், பின்னங்கால் வேறுபாடில்லாமல் பாய்ந்து அங்கேயே கொன்று சுவைத்ததைக் கண்டேன்.

**ஒப்பந்தக் கூலிமுறை:** இன்றைய நடைமுறையில் இருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர் திட்டத்திற்கு முற்றிலும் மாறான, தண்டனைக்குரிய ஒப்பந்தமுறை ஆகும் இது. இம்முறையின்படி கூலி (இந்திய ஒப்பந்தத் தொழிலாளரை அழைக்கும் பெயர்) சிறைச்சாலை போன்ர சூழலில் பணி செய்ய வேண்டும். பணியில் அலட்சியம் காட்டினாலோ அல்லது பணி செய்ய மறுத்தாலோ, மிடுக்காகத் திரிந்தாலோ உத்தரவுக்குக் கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்தக் காலம் முடியுமுன் பணியைவிட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத் தண்டனை வழங்கவோ முடியும். ஓர் அற்பப் பிரச்சனைக்காகக்கூட சட்டச் சரத்துக்களைக்காட்டி தோட்ட உரிமையாளர்கள் தொழிலாளர்களின் சம்பளத்தை மறுப்பதோ அவர்களை சிறையிலடைக்கவோ செய்தனர். கூலி உயர்வுக்காகவோ அல்லது ஒப்பந்தத்தை முறிக்கவோ செய்திட சங்கம் வைத்துப் போராட ஒப்பந்தக் கூலிச் சட்டம் தோட்டத் தொழிலாளர்களை அனுமதிக்கவில்லை. பாரதி தனது 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடலில் பெண் தோட்டத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உருக்கமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. _____________ இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் உண்மையில் நிறுவப்படக் காரணமான போராகும்.

அ) பிளாசிப் போர்

ஆ) முதலாம் கர்நாடகப் போர்

இ) பக்சார் போர்

ஈ) வந்தவாசிப் போர்

2. ______________ உடன்படிக்கையினால் இரண்டாம் ஷா ஆலம் வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸாவின் திவானி உரிமையை ஆங்கிலேயருக்கு வழங்க நேரிட்டது.

அ) அலகாபாத்

ஆ) மதராஸ்

இ) பூனா

ஈ) புதுச்சேரி

3. _______________ வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தினார்.

அ) வாரன்ஹேஸ்டிங்ஸ்

ஆ) டியூப்ளே

இ) காரன்வாலிஸ்

ஈ) ராபர்ட் கிளைவ்

4. _____________ சட்டம் இந்தியாவில் ஆங்கிலேய வணிகக் குழு ஆட்சியை முறைப்படுத்தியது.

அ) ஒழுங்கு முறைச்சட்டம் (1773)

winmeen.com

ஆ) பிட் இந்தியச் சட்டம் (1784)

இ) பட்டயச் சட்டம் (1813)

ஈ) பட்டயச் சட்டம் (1833)

5. இந்தியாவில் முதல் ஆங்கிலேய அரசப் பிரதிநிதி மற்றும் தலைமை ஆளுநராக இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்.

அ) காரன்வாலிஸ்

ஆ) கானிங்

இ) வெல்லெஸ்லி

ஈ) ஹேஸ்டிங்ஸ்

6. ____________ ஜமீன்தார்களோடு காரன்வாலிஸ் நிலையான நிலவரித் திட்டத்தை மேற்கொண்டார்.

அ) மைசூர்

ஆ) பம்பாய்

இ) வங்காளம்

ஈ) சென்னை

7. இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தியவர் ___________

அ) காரன்வாலிஸ்

ஆ) தாமஸ் மன்றோ

இ) ராபர்ட் கிளைவ்

ஈ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

8. தக்கர்களை அடக்கிய ஆங்கிலேய அதிகாரி _________

அ) வில்லியம் ஆதம்

ஆ) வில்லியம் ஸ்லீமேன்

இ) ஜேம்ஸ் ஹாலந்து

ஈ) ஜான் நிக்கல்சன்

9. வாரிசு உரிமை அரசுடன் இணைக்கப்பட்ட முதல் மாகாணம் ___________

அ) நாக்பூர்

ஆ) அவத்

இ) ஜான்சி

ஈ) சதாரா

10. நிர்பந்தப்படுத்தி வலுக்கட்டாயமாக வரி வசூலிப்பதை ___________ நியாயப்படுத்தியது.

அ) இரயத்துவாரி சட்டம்



winmeen.com

ஆ) பிட் இந்தியச் சட்டம்

இ) நிலையான நிலவரித் திட்டம்

ஈ) சித்திரவதைச் சட்டம்

11. ________________ இந்தியாவில் ஆங்கில மொழியை அலுவல் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் அறிமுகப்படுத்தினார்.

அ) காரன்வாலிஸ்

ஆ) வில்லியம் பெண்டிங்

இ) மெக்காலே

ஈ) தாமஸ் மன்றோ

12. சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு _____________

அ) 1837

ஆ) 1861

இ) 1844

ஈ) 1857

13. ______________ என்பவரின் முயற்சியால் இந்தியாவில் சதி எனும் உடன்கட்டை ஏறும் முறை ஒழிக்கப்பட்டது.

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆ) வில்லியம் ஜோன்ஸ்

இ) ராஜா ராம்மோகன் ராய்

ஈ) தயானந்த சரஸ்வதி

14. தென் இந்தியாவில் முதல் இருப்புப் பாதை போக்குவரத்து 1856ல் சென்னையிலிருந்து _________ வரை இயக்கப்பட்டது.

அ) வாணியம்பாடி

ஆ) காட்பாடி

இ) விழுப்புரம்

ஈ) அரக்கோணம்

15. சரியான கூற்றினைத் தேர்ந்தெடு.

அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆ) துணைப்படைத் திட்டத்தால் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவ வளங்களும் செயல்திறனும் குறைந்தன.

இ) வெல்லெஸ்லி பிரபுவால் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் மதரசா (இஸ்லாமிய கல்வி நிறுவனம்) தொடங்கப்பட்டது.

ஈ) டல்ஹௌசி பிரபு மார்ச் 1835இல் கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

16. **கூற்று:** ஆங்கிலேய அரசு அணைகளைக் கட்டுவதற்கான பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டது.

**காரணம்:** 19ஆம் நூற்றாண்டில் தொடர்ச்சியாகக் கடைசி கால் நூற்றாண்டில் அதிகமான பஞ்சங்கள் நிலவின.

அ) கூற்று சரி; காரணம் தவறு

ஆ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல

இ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி

17. கீழ்க்கண்டவற்றுள், எது தவறாக பொருத்தப்பட்டுள்ளது?

அ) கங்காதர ராவ் – ஜான்சி

ஆ) ரகுஜி போன்ஸ்லே – நாக்பூர்

இ) ஷாஜி – சதாரா

ஈ) சிந்தியா – கோலாப்பூர்

18. பொருத்துக.

i) ஆர்தர் காட்டன் – 1. சமஸ்கிருத கல்லூரி

ii) வில்லியம் ஸ்லீமேன் – 2. கொள்ளிடம்

iii) வில்லியம் பெண்டிங் – 3. தக்கர்களை அடக்குதல்

iv) காரன்வாலிஸ் – 4. சதி ஒழிப்புச் சட்டம்

அ) 4, 1, 2, 3

ஆ) 2, 3, 4, 1

இ) 3, 2, 1, 4

ஈ) 2, 1, 4, 3

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. இ) பக்சார் போர் 2. அ) அலகாபாத் 3. ஈ) ராபர்ட் கிளைவ் 4. அ) ஒழுங்கு முறைச்சட்டம் (1773) 5. ஆ) கானிங் 6. இ) வங்காளம் 7. ஆ) தாமஸ் மன்றோ 8. ஆ) வில்லியம் ஸ்லீமேன் 9. ஈ) சதாரா 10. ஈ) சித்திரவதைச் சட்டம் 11. இ) மெக்காலே 12. ஈ) 1857 13. இ) ராஜா ராம்மோகன் ராய் 14. ஈ) அரக்கோணம் 15. அ) கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைமை ஆளுநர் அதன் இயக்குநர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். 16. ஈ) கூற்று தவறு; காரணம் சரி 17. ஈ) சிந்தியா– கோலாப்பூர் 18. ஆ) 2, 3, 4, 1

winmeen.com

## [18] ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள்

பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டுவந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது. இந்த முறை தோன்றுவதற்கு முன்னால் , சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார்கள்.

யூ சுப் கானின் இயற்பெயர் மருதநாயகம். அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம் சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752 – 54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார். ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராகப் பொறுப்பு வகித்தார். யூ சுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பற்றினார். லாலியின் மதராஸ் முற்றுகை (1758 – 59) யின்போது யூ சுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார். மதுரை கோவில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள் வசமிருந்த கோவில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.

வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக்கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.

விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது. திப்புசுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது. 'பகோடா மரத்தை உலுக்குதல்' என்ற சொலவடை இங்கிலாந்து மக்களிடையே நிலவியது. ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்கும் வாய்ப்புகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன என்ற ஐரோப்பியர்களின் அக்கால மனநிலையை இதன் மூலம் நாம் உணரலாம். தமிழில் இதனை வராகன் என்பர்.

கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறுகிறார். டபிள்யூ.ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரியால் 1806 செப்டம்பர் 23 அன்று நிறைவேற்றப்பட்டது.

(சான்று: W.J. Wilson, History of Madras Army, Vol.III, pp. 186 – 89)

சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937 – 39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. உடையார் அரசர்களுக்கு எதிராக மராத்தியர்களை வெற்றிகரமாக கையாண்ட பின் _________ உண்மையான அரசர் ஆனார்.

அ) ஹைதர் அலி

ஆ) நஞ்சராஜா

இ) நாகம நாயக்கர்

ஈ) திப்பு சுல்தான்

2. திப்பு சுல்தான் _____________ பகுதியைக் கைப்பற்றியதால் மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் தொடங்கியது.

அ) கள்ளிக்கோட்டை

ஆ) குடகு

இ) கொடுங்களூர்

ஈ) திண்டுக்கல்

3. பாளையக்காரர் முறை முதன்முதலில் _____________ பேரரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அ) விஜயநகர்

ஆ) பாமனி

இ) காகதிய

ஈ) ஹொய்சாள

4. நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய புலித்தேவரின் மூன்று முக்கியமான கோட்டைகளை ______________ தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

அ) மாபுஸ் கான்

ஆ) யூ சுப் கான்

இ) கர்னல் ஹெரான்

ஈ) நபிகான் கட்டக்

5. வேலு நாச்சியார் _______________ அரசருடைய மகள்

அ) சிவகங்கை

ஆ) புதுக்கோட்டை

இ) இராமநாதபுரம்

ஈ) பழவநத்தம்

6. வீரபாண்டிய கட்டபொம்மன் தொடர்பான பிரச்சனைகளை தவறாக்க் கையாண்டதால் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆங்கிலேய ஆட்சியர் __________ ஆவார்.

அ) W.C. ஜாக்சன்

ஆ) A. பானர்மேன்

இ) S.R. லூஷிங்டன்

ஈ) P.A. ஆக்னியூ

7. வேலூர் புரட்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்த நிகழ்வு __________ ஆகும்.

அ) என்ஃபீல்டு ரக துப்பாக்கித் தோட்டாக்கள்

ஆ) நவீன சீருடை மாற்றம்

இ) புதிய தலைப்பாகை

ஈ) கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள்

8. கோல் எழுச்சிக்குக் காரணமானவர் ___________ ஆவார்.

அ) பிந்த்ராய் மன்கி

ஆ) சிடோ

இ) புத்தபகத்

ஈ) கானூ

9. 1857ஆம் ஆண்டு புரட்சியின்போது இந்தியாவின் கவர்னர் –ஜெனரலாக இருந்தவர் _________ ஆவார்.

அ) டல்ஹௌசி

ஆ) கானிங்

இ) மின்டோ

ஈ) ஜேம்ஸ் அன்ட்ரியூ ராம்சே

10. 1857ஆம் ஆண்டு புரட்சியின்போது நானா சாகேப்பின் படைகளைத் தோற்கடித்தவர் ______________

அ) ஹென்றி லாரன்ஸ்

ஆ) மேஜர் ஜெனரல் ஹோவ்லாக்

இ) சர் ஹியூக் வீலர்

ஈ) ஜெனரல் நீல்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ், திப்பு சுல்தானை பழிவாங்கும் நோக்கில் அணுகினார்.

ஆ) திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

இ) ஆற்காட்டு நவாப் வேலு நாச்சியாருக்கு ஆதரவு அளித்தார்.

winmeen.com

ஈ) திருநெல்வேலி காடுகளின் மையத்தில் காளையார்கோவில் உள்ளது.

12. **கூற்று:** சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

**காரணம்:** மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

ஆ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

இ) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

13. பொருத்துக.

| | |
|---|---|
| i) ஜில்லெஸ்பி | – 1. ஸ்ரீரங்கப்பட்டணம் |
| ii) மஞ்சி | – 2. பாரக்பூர் |
| iii) ஜாக்கோபியம் கழகம் | – 3. வேலூர் கலகம் |
| iv) மங்கள் பாண்டே | – 4. சந்தால்கள் |

அ) 1, 2, 3, 4

ஆ) 3, 4, 1, 2

இ) 3, 2, 1, 4

ஈ) 2, 3, 4, 1

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. அ) ஹைதர் அலி 2. இ) கொடுங்களூர் 3. இ) காகதிய 4. ஆ) யூசுப் கான் 5. இ) இராமநாதபுரம் 6. அ) W.C.ஜாக்சன் 7. இ) புதியதலைப்பாகை 8. இ) புத்தபகத் 9. ஆ) கானிங் 10. ஆ) மேஜர் ஜெனரல் ஹோவ்லாக் 11. ஆ) திப்புவின் ஆட்சியை அகற்றியதும் மைசூரில் மீண்டும் உடையார் வம்ச ஆட்சி நிறுவியதும் தென்னிந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் ஆரம்பத்தைக் குறிக்கிறது. 12. இ) கூற்று சரி; காரணம், கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 13. ஆ) 3, 4, 1, 2

## [19] நவீனத்தை நோக்கி

**பயனெறிமுறை (Utilitarianism):** மிக அதிக எண்ணிக்கையிலானவர்களின் அதிகப்பட்ட மகிழ்ச்சியைக் கோரிய நவீனச் சிந்தனையாளர்கள்.

சுவாமி விவேகானந்தர் இளமை, தைரியம் ஆகியவற்றின் மறுவடிவமாவார். நவீன இந்தியாவின் விடிவெள்ளி எனக் குறிக்கப்படுகின்றார். வாலன்டைன் சிரோல் என்பாரின் வார்த்தைகளில் "தனது ஆளுமைத் திறனால் வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கும் அதனுடைய புதிதாகப் பிறப்பெடுத்துள்ள தேசம் எனும் உரிமைக் கோரிக்கைக்கும் கண்கூடான அங்கீகாரத்தைப் பெற்று தந்த முதல் இந்தியர்" ஆவார்.

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. இந்தியாவில் சீர்திருத்தங்கள் பற்றிய பல கருத்துக்கள் தோன்றிய முதல் மாகாணம் _____________ ஆகும்.

அ)பஞ்சாப்

ஆ) வங்காளம்

இ) பம்பாய்

ஈ) சென்னை

2. "இந்திய மறுமலர்ச்சியின் தந்தை" ____________ ஆவார்.

அ) சுவாமி விவேகானந்தர்

ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராஜா ராம்மோகன் ராய்

ஈ) ஆத்மராம் பாண்டுரங்

3. தேசிய சமூக மாநாடு __________________ முயற்சியால் ஒருங்கிணைக்கப்பட்டது.

அ) M.G. ரானடே

ஆ) தேவேந்திரநாத் தாகூர்

இ) கேசவ சந்திர சென்

ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

4. "வேதங்களை நோக்கி திரும்புக" ….. என்று முழக்கமிட்டவர் ____________ ஆவார்.

ஆ) இராஜா ராம்மோகன் ராய்

இ) விவேகானந்தர்

ஈ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

5. கதைகள் மற்றும் வியக்கத்தக்க உவமைகளின் மூலம் __________ தனது கருத்துக்களை விளக்கினார்.

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

ஆ) தேவேந்திர நாத் தாகூர்

இ) கேசவ சந்திர சென்

ஈ) ஜோதிபா பூலே

6. "ஒரு பைசா தமிழன்" என்ற வாரப் பத்திரிகையை நடத்தியவர் ___________ ஆவார்.

அ) சுவாமி விவேகானந்தர்

ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராமலிங்க அடிகளார்

ஈ) அயோத்திதாச பண்டிதர்

7. பிரம்ம ஞான சபை ________ல் நிறுவப்பட்டது.

அ) இந்தியா

ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

இ) பிரான்சு

ஈ) இங்கிலாந்து

8. தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளராகத் திகழ்ந்தவர் _________ ஆவார்.

அ) இராமலிங்க அடிகளார்

ஆ) காசி விசுவநாத முதலியார்

இ) அயோத்திதாச பண்டிதர்

ஈ) தேவேந்திரநாத் தாகூர்

9. மேற்கத்திய அறிவியலை அறிமுகப்படுத்த சையது அகமதுகான் நிறுவிய அமைப்பு _____________ ஆகும்.

அ) சத்ய சோதக் சமாஜம்

ஆ) சிங் சபா இயக்கம்

இ) அறிவியல் கழகம்

ஈ) பிரம்ம ஞான சபை

10. இஸ்லாமிய சமூகத்தினரின் சமய மீளுருவாக்கத்தை நோக்கமாகக் கொண்டிருந்த இயக்கம் ____________ ஆகும்.

அ) தியோபந்த் இயக்கம்

ஆ) அகமதியா இயக்கம்

இ) அலிகர் இயக்கம்

ஈ) வாஹாபி இயக்கம்

11. சரியான கூற்றினைத் தேர்வு செய்க.

அ) சுத்தி இயக்கத்தை நிறுவியவர் டாக்டர் ஆத்மராம் பாண்டுரங்.

ஆ) சத்திய தர்ம சாலை இராமலிங்க அடிகளால் நிறுவப்பட்டது.

இ) இராமகிருஷ்ண இயக்கத்தை நிறுவியவர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆவார்.

ஈ) அகமதியர்கள் பொதுவான மசூதியில் தங்கள் வழிபாட்டினை மௌற்கொண்டனர்.

12. கூற்று: சையது அகமது கான் அலிகரில் நிறுவிய நவீனப் பள்ளி, பின்னர் முகமதிய ஆங்கிலோ–ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.

காரணம்: முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் தவறு.

winmeen.com

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானவை.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

13. பொருத்துக.

| | |
|---|---|
| i) ஆங்கிலேய சமயப்பரப்புக் குழு | 1. விடிவெள்ளி |
| ii) பார்சி செய்தித்தாள் | 2. வில்லியம் காரே மற்றும் ஜான் தாமஸ் |
| iii) தியோபந்த் இயக்கம் | 3. ராஸ்ட் கோப்தார் |
| iv) விவேகானந்தர் | 4. முகமது காசிம் நநோதவி |

அ) 3, 2, 1, 4

ஆ) 1, 2, 3, 4

இ) 2, 3, 4, 1

ஈ) 2, 1, 4, 3

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

**விடைகள்**

1. ஆ) வங்காளம் 2. இ) இராஜா ராம்மோகன் ராய் 3. அ) M.G.ரானடே 4. ஆ) தயானந்த சரஸ்வதி 5. அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் 6. ஈ) அயோத்திதாச பண்டிதர் 7. ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் 8. ஆ) காசி விசுவநாத முதலியார் 9. இ) அறிவியல் கழகம் 10. அ) தியோபந்த் இயக்கம் 11. ஆ) சத்திய தர்ம சாலை இராமலிங்க அடிகளால் நிறுவப்பட்டது. 12. அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும். 13. ஈ) 2, 1, 4, 3

winmeen.com